ஓம் சாயி ராம்

# சாயி மார்க்கம்

இலங்கை ஸ்ரீ சத்ய சாயி நிலையங்களின்
காலாண்டு இதழ்

# சாயி மார்க்கம்

*SAI MARGAM (Tamil)*


| மலர் 4 | ஒரே ஒரு மதம் | சாயி தர்ம ஆண்டு |
| --- | --- | --- |
| இதழ் 8 | அது அன்பு எனும் மதம் | ஏப்ரல்—ஜூன் 1997 |


## சாயி நிறுவன சிறப்பிதழ்

பொருளடக்கம்


| | |
| --- | --- |
| சாயி மார்க்கம் | 01 |
| சாயி நிறுவனம் | 02 |
| சாயி நிறுவனங்களை வழி நடத்தும் முறைகள் | 05 |
| பகவான் ஸ்ரீ சத்திய சாயி நிறுவனத்தின் பதவியில் இருப்போரின் கடமைகள் 50 | 10 |
| ஈஸ்வரம்மா | 19 |
| இடம் பெயர்ந்தோருக்குச் சேவை | 22 |



| | |
| --- | --- |
| தனிப்பிரதி:- | ரூபா 25/- |
| வருட சந்தா (4 பிரதிகள்) இலங்கை:— | ரூபா 80/- |
| வெளிநாடு:- | US டொலர் 7 |

காசோலை, பணக் கட்டளைகள் அனுப்ப வேண்டியது:

Co-ordinating Committee
Sri Sathya Sai Organisation
Northern Zone

தொடர்பு: ஆசிரியர், சாயி மார்க்கம்.



ஆசிரியர்:
பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்
(நந்தி)

துணை ஆசிரியர்கள்:
ஸ்ரீ. S. R. சரவணபவன்
ஸ்ரீ. வி கே. சபாரத்தினம்

நிருவாக அலுவலகம்: 82, நல்லூர் குறுக்குத்தெரு
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி மார்க்கம்

சாயி மார்க்கம் சனாதன சாரதியின் பாதை. 21ஆம் நூற்றாண்டின் மனித நல வாழ்விற்கு வழி. அதன் இயக்கம் ஆத்மிகம். எல்லா மதங்களும் மனித விழுமியங்களின் அடிப்படையில் ஒன்று சேர்ந்துபோகக் கூடிய மார்க்கம் அதுவாகும். அதனை இதமாகவும் இலகுவாகவும் காட்ட முயலும் ஓர் ஆன்மிக மலரிதழ் உங்கள் கைகளில் இருக்கின்றது.

மனிதன் தனிமையில் வாழமுடியாது; வாழ்வதற்குச் சமூகம் தேவை. இன்றைய நாளில் உலகமே ஒரு சமூகமாக மாறிக் கொண்டு வருகின்றது. நவீன தொடர்பு சாதனங்களின் சாதனை இதுவாகும். இந் நிலையில் ஆன்மிக வாழ்வும் தனிமையில் இருந்து விரிந்து, சமூக ஆன்மிகம்–, உலக ஆன்மிகம் என்று அர்த்தம் கொண்டுள்ளது.

சமூக வாழ்வு ஆன்மிக ஒழுக்கம் நிறைந்ததாக இருக்க வேண்டும், அது சேவையை அடிப்படையாகக் கொண்டது. ஆன்மிக பயிற்சிக்கும், சேவை என்ற சாதனைக்கும் ஒரு நிறுவனம் தேவையாகும். இதற்கு ஏற்பட்டதே ஸ்ரீ சத்திய சாயி நிறுவனம். சாயி நிறுவனம் இனம் குலம், மொழி மதம், கலை கலாச்சாரம் என்று வேறுபடுத்திப் பார்க்காமல்; மனிதன் - ஆத்மா - அன்பு - அவனுள் கடவுள் என்ற இனிய ஒற்றுமையில் இயங்குகின்றது சாயி நிறுவனத்தின் அடிப்படை அமைப்பையும், அதன் பணியாளரின் ஒழுக்கமும் சேவையையும் பற்றிக் கூறுவதற்காக இந்த சாயி மார்க்கம் ''சாயி நிறுவன சிறப்பு இதழ்'' ஆக வெளிவருகின்றது.

சாயி நிறுவனம் பற்றிய பகவானின் அருள் உரைகளை ஒரு கட்டுரையாகத் தந்திருக்கிறோம், இலங்கையின் ஸ்ரீ சத்திய சாயி நிறுவனங்களின் மத்திய இணைப்பாளர் ஸ்ரீ. S, சிவஞானம் ஐயா அவர்கள், சாயி நிறுவனங்களை வழி நடத்தும் முறைகள் பற்றிப் பேசிய பேச்சில் பல அரிய கருத்துக்களை நீங்கள் ஒரு கட்டுரையில் காணமுடியும்.

நிறுவனம் என்றால், அதன் அமைப்பில் சில பதவிகள் உண்டு. பதவி என்றால் பொறுப்பு, பொறுமை, பெருந்தன்மை, அடக்கம், சேவை என்று அர்த்தம். அதிலும் ஓர் ஆன்மிக நிறுவனத்தின் பதவியாளர் என்றால் பணியாளர் என்றுதான் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். பகவான் அருளிய ஏராளமான அருள் உரைகளில் இருந்து, பதவியில் இருக்கும் பணியாளருக்கு அவர் தரும் 50 கடமைகளை விசேஷ கட்டுரையாக இந்த இதழில் தருகிறோம்.

சாயி நிறுவனத்துடன் தொடர்பு கொண்ட அத்தனை அடியார்களும் பணியாளர்களே. ஆகவே இந்தக் கட்டளைகள் சாயி மார்க்கத்தைக் கடைப்பிடிக்கும் எல்லோருக்கும் தந்ததாகக் கொள்ளவும். உண்மையில் ஒழுக்க சீலத்தைக் கடைப்பிடிக்கும் அனைவருக்கும் இந்தக் கட்டளைகள் வழி காட்டும் என நம்புகிறோம்.

சாயி மார்க்கத்தைப் பலர் அறிந்து கொள்ளச் செய்வது உங்கள் ஆன்மிகக் கடமையாகும். அதற்கு இந்த இதழ் பல இல்லங்களிலும், உள்ளங்களிலும் தவழவிட வேண்டும்.

ஜெய் சாயிராம்

ஆசிரியர்.

எங்கள் பகவானின் தெய்விக சொற்பொழிவிலிருந்து...

# சாயி நிறுவனம்

சாயி நிறுவனம் விளம்பரத்திற்காக ஏற்பட்டதல்ல. நமக்கு விளம்பரமும் அவசியமில்லை. உங்களை எல்லாம் இங்கு அழைத்தது யார்? அன்புடன் ஏற்பட்ட உறவு முறைதான் இதற்குக் காரணம். ஸ்வாமியை நோக்கி இடைவிடாது பொழியும் உங்கள் அன்புதான் இதற்குக் காரணம். இது, அன்புக்கு அன்பு; இதயத்திற்கு இதயம் ஏற்படும் உறவுமுறை. உங்கட்கு என்மேல் இருக்கும் அன்பும், எனக்கு உங்கள்மேல் இருக்கும் அன்பும் தான் ஆயிரக்கணக்கில் உங்களை இங்கே கொண்டுவந்து சேர்த்திருக்கின்றன.

இந்த நிறுவனம் மனிதனுக்குத் தன் ஆத்மாவை உணர்ந்துகொள்ள உதவும் நோக்கத்தோடு அமைக்கப்பட்டிருக்கிறது. நீ இந்த உடலின் அங்கமல்ல, இயற்கையின் அங்கமுமல்ல; நீ ஆத்ம தத்துவம்.

''மாமை வம்ஸா ஜீவலோகே,
ஜீவதேவ சனாதன''.

நீ தெய்வத்தின் ஒரு பொறி. இந்த உண்மையை நீ புரிந்து கொள்வதற்காகத் தான் இந்த நிறுவனம் தொடங்கப்பட்டிருக்கிறது.

ஸ்வாமி மனித மனங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவருகிறார், ஏன்? எப்போது மாற்றத்தை எதிர்பார்க்க முடியும்? தெரிந்தால்தான் அது ஏற்பட முடியும். ஆத்ம தத்துவத்தைப் புரிந்துகொள்ள உனக்கு முதலில் சில ஆதாரமான செய்திகள் தேவை. இந்த நிறுவனம் அந்தச் செய்திகளை எடுத்துக் கொள்வதற்காகவும் பிறருடன் நீ அதைப் பகிர்ந்து கொள்வதற்காகவும் தான் துவங்கப்பட்டது. இந்த நிறுவனத்தில் முக்கியமானது சேவை. இந்த உடல் நமக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டிருப்பதன் நோக்கமே சுயநலமற்ற சேவை செய்யவே என்ற ஆதார உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

''பரோபகார்த்தம் இதம் சரீரம்''

சுயநலமில்லாத சேவை உன் இதயத்தை விசாலமாக்குகிறது. உன் அகங்காரத்தை அடியோடு விலக்குகிறது. எல்லையற்ற ஆனந்தத்தை அளிக்கிறது. அனைவரும் சகோதரரே என்ற தத்துவத்தையும் அது கற்றுத் தருகிறது. எப்போது மற்றவரை சகோதரராகவும், இறைவனைத் தந்தையாகவும் நினைக்கும் எண்ணத்தை வளர்க்கிறோமோ அப்போதுதான் இந்த நிறுவனத்திலிருந்து நாம் சரியான செய்தியை அடைந்தவர்களாகிறோம். நீ என்ன செய்தாலும், எதைப் பார்த்தாலும் என்ன வேலை செய்தாலும் அது இறைவனின் பணியே. அன்பு - சத்தியம் - சேவை எல்லாம் ஒன்றுதான். மனித குலத்திற்கு அன்பும், சேவையும் இரண்டு இறக்கைகள் மாதிரி. அதனால் மனிதன் எங்கும் நிறைந்திருக்கும் தெய்வதத்துவத்தை இந்த இரண்டு இறக்கைகளான அன்பு, மற்றும் சேவை மூலம் புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும்.

சேவையென்றால் ஏதோ மற்றவருக்கு கரங்களாலும் உடலாலும் பேச்சாலும் உதவுவது என்பதல்ல. தாய் குழந்தைக்கு உதவுகிறாள். குழந்தை தாய்க்கு உதவுகிறது. கணவன் மனைவிக்கு உதவுகிறான்; மனைவி கணவனுக்கு உதவு

கிறாள்; இப்படிபார்க்கப்போனால் எல்லோரும் வேலையாட்களே. கடவுள் மட்டும் தான் தலைவர். ஆகவே ஒவ்வொருவரும் தலைவர் - பணியாள் என்ற இந்தக் கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

நம்முடைய நிறுவனத்தில் இருக்கும் இன்னொன்றையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய சேவா தளத் தொண்டர்கள் உண்மையான சேவகர்கள். நம்முடைய நிறுவனத்தில் இலட்சக்கணக்கான பணியாளர்கள் எப்போதும் முழு ஈடுபாட்டுடன் பணிபுரியத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்களைமட்டும் பணியாளர்கள் என்று பிரித்துப்பார்க்கக் கூடாது. நீங்கள் எல்லோரும் கூடப் பணியாளர்கள்தான். சிலர் தன்னைத் தலைவனாகவும், உயர்ந்தவனாகவும் எண்ணிக் கொள்கின்றனர். அது உண்மையல்ல. ஏனெனில் இந்த உலகத்தில் ஒவ்வொருவரும் வேலைக்காரனாக நடந்து கொள்ள வேண்டும்,

நமது சேவை நிறுவனங்கள் செய்யும் சிறந்த சேவைகளைப்பற்றி ஸ்வாமி முழுவதும் அறிவார். சாயி நிறுவனத்தைப் போன்று ஒரு நிறுவனம் இந்த உலகில் வேறெங்கும் காணமுடியாது என்று சொன்னால் அது மிகைப்படுத்திச் சொல்வதாக ஆகாது. எந்த ஒரு நிறுவனத்திலும் இப்படிப் பணியாளர்களாக இலட்சக்கணக்கில் மக்களுக்கு உணவும் தண்ணீரும் இத்தனை ஒழுங்காக அளித்து சேவை செய்பவர்களைப் பார்க்க முடியாது. நம் நிறுவனத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் சில உன்னதமான குணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்தியில் ‘‘ஜைஸே அன் வைஸே அன்’’ என்பர். உணவு எப்படியோ அப்படியேதான் எண்ணங்கள். இதே பாவனையில் தான் ‘‘யத்பாவம் தத் பவதி’’ என்று சொல்லப்படுகிறது. எண்ணம் எப்படியோ, அனுபவமும் அதற்கேற்பவே அமைகின்றது. அதனால் நம் உணவுப் பழக்கங்கள் சரியான முறையில் அமைய வேண்டும். தவறான உணவுப் பழக்கங்களால் தான் மனதில் எத்தனையோ தீய எண்ணங்கள் எழுகின்றன. அதனால் குடிப்பதையும், புகைப்பிடிப்பதையும் நிறுத்துங்கள். அவை உங்கள் உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கும். ஆரோக்கியமில்லாத மனிதனால் இவ்வுலகில் எதையும் அடையமுடியாது. புகைப்பதையும் குடிப்பதையும் நிறுத்துவதோடு மாமிசம் சாப்பிடுவதையும் நிறுத்துங்கள். மாமிசம் உண்பது மிகவும் கெடுதலானது. மிருகங்களின் மாமிசத்தை உண்பதால மனிதனுக்கும மிருக குணங்கள் ஏற்படுகின்றன. உணவு எப்படியோ அப்படியே சிந்தனைகள். நான்காவதான தீய பழக்கம் சூதாடுவது.

எவரெல்லாம் ஆன்மீகப் பாதையில் செல்ல விரும்புகிறார்களோ, அவர்கள் எல்லாம் புகைப்பது, குடிப்பது, மாமிசம் சாப்பிடுவது, சூதாடுவது இவற்றை விட்டு விட வேண்டும். இந்த நான்கும் தீய பழக்கங்கள். ஆன்மீக வாழ்வுக்கு ஏற்றவையல்ல, ஒரு சிறிது நேரம் மாமிசம் உண்பதைப்பற்றி யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு இருக்கும் இந்த மாமிசம் உண்ணும் பழக்கத்தினால் மாமிசம் விற்பவர்கள் ஏதும் அறியாத மிருகங்களைப் பிடித்துக் கொல்வதில் ஈடுபடுகிறார்கள். அந்த மிருகங்களின் சாவுக்கு நீங்கள்தான் காரணம்! உங்கள் நாவின் சுவைக்குத் திருப்தியளிப்பதற்காக, எத்தனையோ ஒன்றும் அறியாத கால்நடைகள் கொல்லப் படுகின்றன என்பது மிகவும் சோகமானது அல்லவா? எப்போதும் உதவுங்கள், எவரையும் துன்புறுத்தாதீர்கள். இதுதான் உண்மையான மனித குண நலன், வழிபாடும், புண்ணிய க்ஷேத்திரங்களுக்குச் செல்வதும் மட்டும்தான் ஆன்மீகம் என எண்ணாதீர்கள். அவை ஆன்மீக பயிற்சிகள்

மட்டுமே. உண்மையான ஆன்மீகம் என்பது தமக்குள் ஆன்மீக ஞுணங்களை வளர்த்துக் கொள்வது என்று அர்த்தம். உலகில் எத்தனையோ மகாநாடுகள், அவற்றில் எத்தனையோ தீர்மானங்கள் உருவாகின்றன. ஆனால் மகாநாடு முடிந்ததும் பங்கேற்றவர்கள் அந்த மகாநாடு சம்பந்தப்பட்ட பேப்பர்களை அலட்சியமாக கிழித்து எறிகிறார்கள். நாம் அப்படி நடந்து கொள்ளக்கூடாது. நாம் ஒரு தீர்மானம் போட்டால் அதை உடனே நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். விதிமுறைகளுக்குப் பணியாமல் இருக்கக் கூடாது.

பகவான் தொகையைப்பற்றி கவலைப் படுவதில்லை. அதன் தரத்தைத்தான் பார்க்கிறார். பல பீப்பா கழுதைப் பாலை விட ஒரு ஸ்பூன் பசும்பால் உயர்ந்ததல்லவா? நீங்கள் அனுபவித்த மகிழ்ச்சியை மற்றவருடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அதுதான் உண்மையான சேவை.

ஆகையால் சத்தியசாயி நிறுவனங்களின் அங்கத்தினர்கள் அமுதம் போன்ற வார்த்தை உடையவர்களாக இருக்க வேண்டும். இதயம், வெண்ணெய் போன்று இளகக் கூடியதாக இருக்க வேண்டும். மனம் அமைதியாக வெண்ணிலவின் ஒளியைப் போன்று குளிர்ச்சியாக இருக்க வேண்டும். மகாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு எதையும் நடைமுறைப் படுத்தாமல் விடுவது சரியல்ல. கடந்தவை கடந்து போனவையாகவே இருக்கட்டும். அதை மறந்து விடுங்கள். நிகழ்காலத்தை நேசியுங்கள், அதை அனுபவியுங்கள், வேற்றுமை பாராட்டாதீர்கள். வெறுப்பு, பொறாமை இவை எல்லாம் வேண்டாம். அவை எல்லாம் இருந்தால் கஷ்டம் என்னவோ உங்கட்குத்தான். எப்போதும் உதவி செய்யுங்கள். யாரையும் துன்புறுத்தாதீர்கள்.

*1995 - 11 - 21ஆந் திகதிய*
*சுவாமியின் சொற்பொழிவிலிருந்து*
தொகுத்தவர் -
சி. முத்துலிங்கம்

## சாயி மார்க்கம் இதழுக்கு விடயம் அனுப்புவோருக்கு வேண்டுகோள்

1 எழுத்துக்கள் தாளின் ஒரு பக்கத்தில் தட்டச்சில் அல்லது மிகவும் தெளிவான தனித்தனி எழுத்துக்களாலான கையெழுத்தில் இருக்க வேண்டும். தாளின் இடது ஓரத்தில் $1\frac{1}{2}$ அங்குல வெற்றிடம் விட வேண்டும்.

2 ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட விடயங்களிலிருந்து தழுவி அல்லது தொகுத்து அனுப்புவதானால் மூலத்தின் முழு விவரம் தரவேண்டும்.

உதாரணம்: I. SATHYA SAI SPEAKS (1981) CALL TO SAI SAMITHI MEMBERS, VOL. XV, PAGES 94 - 95

II. ஞான பூமி (ஜனவரி 1995), பாமரன் சேவையில் பாபா, பக்கங்கள் 29 - 32

3 சாயி நிறுவன செய்திகள் வரவேற்கப்படுகின்றன. சுருக்கமாகத் தமிழில் எழுதி விரைவில் அனுப்பவும்.

4 விடயங்களை சாயி மார்க்கம் இதழுக்கு ஏற்றவாறு திருத்தி அமைக்கும் உரிமை ஆசிரியருடையது ஆகும்.

1997-01-18 (சனிக்கிழமை) கொழும்பு-7, பாண்ஸ் பிளேஸ் இல. 22, 'சாயி மந்திர்'இல் 'தர்ம ஆண்டு' பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் மத்திய இணைப்பாளர் ஸ்ரீ எஸ். சிவஞானம் அவர்கள் ஆற்றிய உரை

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி நிறுவனங்களை வழிநடத்தும் முறைகள்

ஒவ்வொரு மதத்துக்கும் ஒருவராக நான்கு மதங்களைச் சேர்ந்த நான்கு பெரியார்கள் உரையாடி முடித்துள்ளனர். இது ஒருவகையில் மத நம்பிக்கைகளுக்கு இடையிலான கருத்தாடலாகும். உலகின் பல பாகங்களிலும் வெவ்வேறு மத விசுவாசிகளிடையே சந்திப்புக்கள் நடைபெறும் சம்பவங்கள் அபூர்வமானவையல்ல. நெடுங் காலத்துக்கு முன்னர், 1893இல் சிகாகோ நகரில் பிரமாண்டமான அளவில் நடந்த உலகச் சமயங்களின் பேரவை மகாநாடும் இவ்விதமான ஒரு நிகழ்ச்சியேயாகும்.

## ஆத்மீக சந்திப்புகள்

அண்மைக் காலங்களில் பல நாடுகளிலுள்ள சத்திய சாயி நிறுவனங்களின் ஊக்கத்தினால் அவ்வந்நாடுகளிலுள்ள மத நம்பிக்கை முறைகளுக்கிடையே சந்திப்புகள் நிகழ்த்தப்படுவது மனதுக்கு நிறைவு தருவதாக இருக்கின்றது. இங்கும் கொழும்பு சத்திய சாயி சமித்தியினர் தங்களுடைய வருடாந்த முக்கிய நிகழ்ச்சியை பழக்கப்பட்ட, வழமையான முறையிலே கொண்டாடுவதை விடுத்து பிரயோசனமானதாகவும், பயன்விளையும் வகையிலும் புது முறையை ஏற்படுத்தியதற்கு சமித்தியின் தலைவரையும், நிர்வாக உறுப்பினர்களையும் நான் பாராட்டவேண்டும். மத நம்பிக்கை முறைகளுக்கு இடையிலான சந்திப்புகள் இனிவரும் ஆண்டுகளில் மேலும் உத்வேகம் பெறவே செய்யும். அதன் உச்சக்கட்டமாக ஐக்கிய நாடுகள் ஆத்மீக சங்கம் ஒன்றும் உருவாகக்கூடும். ஐக்கிய நாடுகள் ஆத்மீக சங்கம் உருவானால் அதன் தலைமையகமாக பகவான் பாபாவின் ஆச்சிரமம் அமைந்துள்ள பிரசாந்தி நிலையத்தை விட சிறந்த இடம் வேறொன்று இருக்க முடியாது.

'சத்திய சாயி நிறுவனங்களை வழி நடத்தும் முறைகள்' என்ற தலைப்பில் சத்திய சாயி நிறுவனங்களின் தார்மீக விதிகளைப்பற்றிப் பேசும்படி கேட்கப்பட்டுள்ளேன். 1996 இலிருந்து 2000ஆம் ஆண்டு வரை இவ்விடயம் குறித்து திரும்பத்திரும்பப் பேசி, திரும்பத்திரும்ப மதிப்பிடும்படி எங்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தீவிர நடவடிக்கை குறிப்பாகத் தலைமைப் பீடத்தனரின் முன்னிலையில் நடைபெற வேண்டும். அப்போதுதான் மலரவிருக்கும் பொற்காலத்தின் முதல் 20 ஆண்டுகளுக்கான அவதாரப் பணிக்கு நாங்கள் பூரணமாக எங்களைத் தயார் செய்துகொள்ள முடியும்.

சாயி நிறுவனம் என்பது என்ன? அதன் முக்கிய விதிகளும், ஒழுக்க முறைகளும் யாவை? சாயி நிறுவனம் ஓர் ஆத்மீக நிறுவனம். அது எந்த ஒரு மதத்தையும் பிரகடனம் செய்யவில்லை. அதன் உப விதிகள் என்ன? இலகுவான வார்த்தைகளில் அவற்றைப் பின்வருமாறு கூறுவேன்: அன்பு, சேவை, கடமை, கட்டுப்பாடு, பக்தி, தூய்மை.

## இந்த நிறுவனத்தின் தலைவர் யார்?

ஸ்ரீ சத்திய சாயி பாபா இதன் தலைவர் அல்ல. பின் யார்? சட்டங்களை விதிப்பவர் என்று சாதாரண வழக்கில் சொல்லக்கூடிய ஒருவரும் இல்லை. ஆனால் ஊழியர்கள் இருக்கின்றார்கள். தெய்வீகக் குருவின் வழிகாட்டலுக்கு அமைய பல்வகைப்பட்ட பணிகளை வெவ்வேறு மட்டங்களிலிருந்தும் நிறைவேற்றுகின்றார்கள். பகவான் பாபாவின நெருங்கிய பக்தர்கள் யார்? அப்படி யாரும் கிடையாது. எட்ட உள்ள பக்தர்கள் யார்? எவரும் இல்லை. ஒருவர் தன் விருப்பப்படி ஒன்றில் நெருக்கமாக இருப்பார் அல்லது தூரமாக இப்பார். பொதுமக்களுக்கும் பாபாவுக்கும் இடையே 'தரகர்கள்' (Intermediaries) யாரும் இருக்கிறார்களா? அப்படி எவரும் இல்லை. அப்படியென்றால் நிறுவனத்தை ஒருங்கிணைத்து வைத்திருப்பது எது? அது தனியாய் பக்தனுக்கும் பாபாவுக்கும் இடையே ஓடும் புனித இழை அல்லது பிணைப்பு ஆகும். பாபா எங்களிடமிருந்து எதிர்பார்ப்பது என்ன? பெற விரும்புவது எதனை? எதுவுமில்லை. மலர்களைக்கூட அவர் ஏற்றுக் கொள்வதில்லை. தெய்வீகச் சக்தியினால் படைக்கப்பட்ட மலர்களை எம்முடையது என்று சொல்லிக் கொண்டு தெய்வத்துக்குக் காணிக்கை செலுத்துவதன் கருத்து என்ன? அன்பு ஒன்றையே தெய்வம் விரும்புகின்றது!

## நிறுவனம் ஏன்?

தெய்வம் எங்களோடு தொடர்பு கொள்வது பற்றியுள்ள சிந்தனைகள் அனைத்தின் சாரமும் நான் மேலே சொன்ன கொஞ்ச வாக்கியங்களில் அடங்கியுள்ளதாக நினைக்கின்றேன். இதனை இன்னும் விரித்து நூற்றுக் கணக்கான வசனங்களிலும் கூறலாம். பாபாவுக்கு ஒரு நிறுவனம் தேவையில்லை. பாபாவை அடைவதற்கு நிறுவனம் ஒன்று எங்களுக்குத் தேவை. எப்படியாகிலும் பாபா தொடர்ந்து நிறுவனத்தை ஆசிர்வதித்து வருகின்றார். அருளுரைகள், கட்டுரைகள், பேட்டிகள் என வெவ்வேறு வகைகளில் வழிகாட்டு முறைகளை வழங்குகின்றார்.

## ஒழுக்கக் கோவை

எல்லாருடைய ஆன்ம ஈடேற்றத்துக்காகவும் பகவான் பாபா தந்தருளிய சில அடிப்படை நெறிகள் உள்ளன. அனைவராலும் "ஒன்பது ஒழுக்கக் கோவை" என்று சொல்லப்படுவதே அது. கோவை பக்தியோகம், கர்ம யோகம், ஞான யோகம், ராஜயோகம் ஆகியவற்றின் சாரத்தை அடக்கியுள்ளது. அது விதிப்பதாவது:

(1) சக மனிதர்களுக்கும் சேவை.

(2) காலத்துக்குக் காலம் தோன்றும் அவதாரங்களின் உபதேசம் மூலமாகவும், முற்காலந் தொட்டு வரும் ஞானிகள், மகான்களின் அனுபவங்கள் மூலமாகவும் ஆன்மீக அறிவைத் தேடுதல்.

(3) தற்சோதனை, தியானம், மன அமைதி.

(4) குடும்ப அங்கத்தவர்கள் ஒன்று கூடி வாரத்தில் ஒரு நாளாவது இறை மகிமைகளைப் பாடிப் பிரார்த்தனை செய்தல். ஆத்மீக விடயங்கள் குறித்து சத் சங்கம் செய்தல். தங்களுக்குப் பிடித்தமான அல்லது தாங்கள் வாழ்ந்து பழகிய சூழலுக்கு ஏற்ற தான ஆத்மீக சாதனைகளைச் செய்தல்.

(5) மேற்படி சாதனைகளை ஒரு பொது இடத்திலே மாதத்தில் ஒரு தடவையாவது சேர்ந்து தம்முடன் வாழும் சமூகத்தவர்களோடு கூட்டாகச் செய்தல்.

(6) கோபத்தை அடக்கி மென்மையாகப் பேசுதல். கோபமானது கோபிப்பவர் உட்பட சுற்றியுள்ள எல்லோருக்கும் தீமை விளைவிக்கின்றது.

(7) உங்களுக்கு 6 தொடக்கம் 15 வரை வயதுள்ள பிள்ளைகள் இருந்தால், பயிற்றப்பட்ட குருமார்களினால் கிழமையில் ஒருநாள் ஒரு மணி நேரத்துக்கு நடாத்தப்படும் மனித மேம்பாட்டு கல்விப் பயிற்சிக்கு அவர்களை அனுப்புதல்.

(8) உணவை, நீரை, சக்தியை, பணத்தை, நேரத்தை வீணாககாது இருத்தல. ஆசைகளுக்கு வரயபிடுதல. அவ்விதம் மீதப்படுத்திய பணத்தை, உணவை, நேரத்தைக் கொண்டு தேவையுள்ளவர்களுக்கு உதவுதல்.

(9) அவதூறு பேசுவதை விட்டொழிதல. அது வன்முறையின் ஒரு வடிவமாகும். மனிதர்களை நிந்திகக வேண்டாம. அதுவும் அவர்களுக்குப் பின்னாலே அதைச் செய்யவேண்டாம்.

மனிதர்கள் எல்லாருள்ளும் தெய்வீகம் உறைகின்றது. பிறப்பு இறப்பு என்று சுழலுவதை முடிவுக்குக் கொணடுவந்து அனைவரும் ஒருநாள் இறுதி இலக்கை அடைவார்கள். அது இப்பிறவியில் இல்லாமலும் போகலாம. சிலரின் முன்னேற்றம் மந்தம். அதனால் அவர்களைப் பரிகாசததுககோ, சிறுமைக்கோ ஆளாக்க வேணடியதில்லை. அவர்களுக்கு ஓர் உதவிக் கரம தேவை. நிந்தையல்ல! மறறவர்களிலும நாங்கள் பரிசுத்தவான்கள் என்று கூறிக்கொள்பவரின் பிரத்தியேக சங்கமலல சத்திய சாயி நிறுவனம். மதம், இனம், மொழி, குலம் முதலான பாகுபாடுகளின்றி சத்தியத்தைத் தேடும் அனைவருக்கும் அதன் கதவுகள் திறந்திருக்கின்றன. கடைசியாக எங்கள் ஆத்மீக முன்னேற்றத்தின் இறுதிக் கட்டங்களில் இந்த வித்தியாசமே இருக்காது; இருக்கவும் கூடாது.

கட்டிக் காப்பதற்கென்று உன்னத நீதி ஒழுக்க நெறிகள் சாயி நிறுவனத்திற்கு விதிக்கப்பட்டுள்ளன. இந்த விதிகளின் தோற்றுவாய் புராதன வேத சாஸ்திரங்களும், தெய்வீக அவதாரங்கள் மனுக்குலம் அனைத்துக்கும் அருளிச் சென்ற போதனைகளுமாகும். எங்களில அனேகரைப் பொறுத்தவரை பகவான் பாபா உபதேசங்களை எடுத்துச் சொல்லும் பாங்கின் எளிமைதான் கவர்ச்சிமிக்கதாய் இருக்கின்றது. விஞ்ஞானிகள் மத்தியில் அவர் ஓர் விஞ்ஞானியைப் போல் பேசுகின்றார். தத்துவஞானிகள் மத்தியில ஒரு தத்துவ ஞானியைப போல பேசுகின்றார், வேத விற்பன்னர் மத்தியல ஒரு வேத விற்பன்னர் போல் பேசுகின்றார். எங்களைப் போன்றவர்கள் மத்தியல் ஒரு சாதாரண குருவைப் போல் பேசுகின்றார். கீழே குறிப்பிடப்பட்டுள்ளவற்றை விடவும் எளிமையானது வேறேது?

நல்லதையே சிந்தை செய்
நல்லதையே பேசு
நற் பணிகளையே செய்
நல்லதையே பார்
நல்லதையே கேள்.

புத்தபகவான் இவற்றோடு இன்னும் மூன்றைச் சேர்த்து அட்ட சீலங்கள் ஆக்கினார். அவையாவன: நற் பிழைப்பு, நற் பிரயத்தனம், நல்ல அவதானம்,

## ஆத்ம விசாரணையும் சேவையும்

சத்திய சாயி நிலையங்கள் சத்சங்கத்தையும் ஆத்ம விசாரணையையும ஊக்குவிக்கவேண்டும் என்று பாபா விரும்புகிறார், காயத்ரி மந்திரத்தின் கருத்தாவது: ''உள்நின்று ஊக்குவித்து மூவுலகங்களிலுமுள்ள எல்லாவற்றையும் இயக்கும் தெய்வத்தின் பரமஜோதிப் பிரகாசத்தை வணங்கித் தியானிக்கின்றோம. அவர் எங்கள் புத்தியைத் தூண்டி உண்மையை உணரச் செய்வாராக''.

இறைவன் இதயவாசியானதை விளக்க சுவையான கதை ஒன்று உண்டு. மனிதனைப் படைத்த இறைவனுக்கு தவறு செய்து விட்டோமே என்பதை உணர அதிக நேரம் பிடிக்கவில்லை. நானாவித கோரிக்கைகளோடும் மனிதன் இறைவனை நச்சரிக்கத் தொடங்கி விட்டான். இறைவனுக்கு அமைதி இல்லை. எங்கே ஒளிந்து கொள்ளலாம் என்று இடம் தேடலானார். இந்தக் கட்டத்திலே நாரதர் வந்தார். அவர் கூறிய வழி வருமாறு:

> ''தேவா! சமுத்திரத்தின் அடியிலோ வானத்தின் முகட்டிலோ எங்கே போய் நீங்கள் ஒளிந்து கொண்டாலும் பிரயோசனமில்லை. ஏனெனில் தன் புத்தி நுட்பத்திறனால் அந்த இடங்களைத் துருவிப் பார்க்காமல் மனிதன் விடமாட்டான். அவனுடைய இதயத்தில் ஒளிந்து கொள்ளுங்கள். அங்கே தேடுவதற்கு எத்தனிக்க மாட்டான்.''

தங்கள் குறுகிய அபிமானங்களிலிருந்து அங்கத்தவர்களை விடுபடச் செய்வதற்கு நிறுவனம் உதவ வேண்டும். பன்மையில் ஒருமையைக் காணவேண்டும். 'நான்' 'எனது' என்ற எண்ணம் எந்த நேரமும் எம்மை ஆட்சி செய்யக் கூடாது. இது அகங்காரத்தை முன்னிறுத்தி ஆண்டவனைப் பின்தள்ளிவிடும். நாங்கள் மக்கள் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். சமூகத்துக்குச் செய்யவேண்டிய கடமைப்பாடுகளைச் செய்யவேண்டும், சாயி நிலையம் சேவையை அடிப்படையாகக் கொண்டது. பஜனை முடிவுறும் தறுவாய்களில் இந்தச் சமித்தியின் தலைவரோ, செயலாளரோ அறிவிப்புகள் செய்வதை பலமுறை கவனித்திருக்கின்றேன். சமித்தி ஜீவகளையோடு இயங்குவதாக அவ்வேளைகளில் எனக்குத் தோன்றுவதுண்டு. தங்களுக்குத் தோன்றும் படியுள்ள சமூகத் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, சேவைப் பணிகளைக் குறிப்பிட்டு, அங்கத்தவர்களை ஆங்காங்கே செல்வதற்கு அழைக்கின்றார்கள்,

எங்களுடைய நாட்டிலும், உலகின் ஏனைய பகுதிகளிலும் சீரழிந்து வரும் மனித மேம்பாடுகளைக் குறித்து நிறையப் பேசப்படுகின்றது. அதன் கருத்து தீயவர்கள் பெருகிவருகின்றார்கள் என்பதாகும். சாயி நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் சொந்த எடுத்துக் காட்டின் மூலம் இதற்கு ஒரு வழி செய்யலாம். உதாரணத்துக்கு, ''நான், முன்மாதிரிக்காக, இக்கணத்திலிருந்தே உயரிய நீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பேன்'' என்று உறுதி பூணுவேனாகில் மனித மேம்பாட்டிலிருந்து பிறழும் மனிதர் எண்ணிக்கை ஒன்றை என்னால் குறைக்க முடியும்! இந்த மண்டபத்திலுள்ள அனைவரும் இவ்வாறு தீர்மானம் எடுத்தால் இது விடயமாக நாங்கள் உருப்படியாக ஏதோ செய்தவர்களாவோம். குறிப்பாக தலைமைப் பீடத்திலுள்ளவர்களுக்கு இது ஒரு சவாலாகும்!

## எமது பங்கு

ஒரு சின்னக் கதை மூலம் இந்தத் தாபனத்திலுள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் அறிவுரையைக் கூற விரும்புகின்றேன். எல்லா இந்துக் கோயில்களையும் சுற்றிவர பிரகாரம் இருக்கும். உற்சவ காலங்களில் மூர்த்தியை பிரகாரத்தின் வழியாக வீதிவலம் எடுத்து வருவார்கள். ஒரு கோயிலில் திருப்பணி வேலை நடந்து கொண்டிருந்தது. வழிபாடு செய்யும் ஒருத்தர் பிரகாரத்தின் வழியாக வந்து கொண்டிருந்தார். தெற்குப் பிரகாரத்திலே ஒரு மனிதன் குந்தியிருந்து ஒரு சிறு சம்மட்டியால் கற்களை உடைத்துக் கொண்டிருந்தான், அவர், ''என்னப்பா செய்கிறாய்?'' என்று அவனைக் கேட்டார்.

'சும்மா கற்களை உடைக்கிறேன்' என்றான் அவன், அவர் மேலே நடந்தார். மேற்குப் பிரகாரத்திலும் ஒருத்தன் இருந்து கற்களை உடைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவனிடமும், 'என்னப்பா செய்கிறாய்?' என்று கேட்டார். 'என் பெண்சாதியை, பிள்ளைகுட்டியைக் காப்பாற்ற ஏதோ உழைக்கிறேன்' என்று அவன் பதில் சொன்னான். அவனுக்கு ஏதோ குறிக்கோள் இருந்தது. இதைக் கேட்டுக் கொண்டு அந்த மனிதர் தொடர்ந்து சென்று வடக்குப் பிரகாரத்திலே கல்லுடைத்துக் கொண்டிருந்த மூன்றாவது ஆளை அணுகினார். அவரிடமும் 'என்னப்பா செய்கிறாய்?' என்று கேட்டார். 'நான் கோயில் திருப்பணி செய்கிறேன்' என்றான் அவன்.

கல்லுடைத்தவர்கள் மூவரும் செய்தது ஒரே வேலை. மனோபாவங்கள் மூன்று விதமாக இருந்தன. மூன்றாவது தொழிலாளி தலைமைக் கொத்தனான ஸ்தபதியின் நிலைக்கு உயர்ந்து நின்றான். பாபாவின் அருட்காப்பிலுள்ள நாங்கள் வடக்குப் பிரகாரத்தில் எங்களை நிறுத்திக் கொள்வோம். உலகிலே ஆன்மிக மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதான அவரின் அவதாரப் பணிக்கு எமது பங்கை ஆற்றுவோம்.

(தமிழாக்கம்: ஸ்ரீ வி. கே. சபாரத்தினம்)


## தமிழில் சாயி நூல்கள் பற்றிய ஆய்வு

## ஒரு வேண்டுகோள்

இதுவரை பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா, பகவானின் போதனைகள், பாலவிகாஸ், பஜனை கைநூல்கள், சாயி நிலைய சேவைகள் ஆகியன பற்றி இலங்கையில் தமிழில் வெளிவந்த சகல நூல்கள், சஞ்சிகைகள் பற்றிய ஓர் ஆய்வு செய்து நாம் பிரசுரிக்க இருப்பதால், நூலாசிரியர்கள், வெளியீட்டாளர்கள், சாயி அன்பர்கள் எமக்கு ஒரு பிரதியை அனுப்புமாறு தயவாக வேண்டுகிறோம்.

கூடியவிரைவில் அனுப்பி இந்த சாயி சேவைக்கு உதவவும்.

அனுப்பவேண்டிய முகவரி:

*Editor*
*SAI MARGAM*
82, *Nallur Cross Road,*
*Nallur.*
*Jaffna.*

# பகவான் ஸ்ரீ சத்திய சாயி நிறுவனத்தின்

# பதவியில் இருப்போரின் கடமைகள் 50

இப் பக்கங்களில் வருவன பகவானின் அறிவுரைகளில் இருந்து தமிழ் நாட்டின் சாயி அடியார் ஒருவரால் தொகுக்கப்பட்டவை. இலங்கை கிழக்குப் பிராந்திய ஸ்ரீ சத்திய சாயி நிறுவன இணைப்புக் குழு இதனை ஆங்கிலத்தில் பிரசுரித்து நிலையங்களுக்கு விநியோகித்தது. இங்கே தமிழில் தருகிறோம்.

தமிழாக்கம்: ஸ்ரீ வி. கே. சபாரத்தினம்

(1) நிர்வாகப் பதவி ஒன்றில் நியமனம் பெறும்போது பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகக் கருதவும்; கௌரவம் பெறுவதாகக் கருத வேண்டாம்.

(2) கடமையும் கட்டுப்பாடும் உங்கள் பக்திக்குக் காப்பாகின்றன.

(3) தன்னை அறிதல் என்கிற ஆத்மீக ஞானம் பெறுவதற்கு கட்டுப்பாடு முதற்படி. கஷ்டங்களையும், இடைஞ்சல்களையும் தாங்கினால் அது மகிழ்ச்சிக்கும் பேரானந்தத்துக்கும் இட்டுச் செல்லும். நீங்கள் பூரண நிலை அடையும் பட்சத்தில் மட்டுமே கட்டுப்பாடுகளைப் பற்றிக் கவலைப்படத் தேவை ஏற்படாது.

(4) குறைந்தது முப்பது நிமிடங்களாவது மானசீக சாதனை - அதாவது இறை தியானம் செய்தல் வேண்டும்.

(5) அகந்தை கொள்ள வேண்டாம். நீங்கள் அடியார்களின் ஊழியர்களே. வராத அங்கத்தவர்களை நீக்குவது சுலபம். பணிகளிலெல்லாம் அவர்களை ஈடுபடச் செய்துவிட்டீர்களானால் அது சாதனை. இறைவனுக்கும் அது பிரீதியாகும்.

(6) இறை தூதர்களான தீர்க்க தரிசிகள் தங்கள் பொருட்டல்லாமல், தங்களைப் பின்பற்றியவர்களின் சுபிட்சத்துக்கே பிரார்த்தித்தார்கள்.

(7) ஓம்காரம் அடியார்கள் அனைவருக்கும் கட்டாயமானது. தினமும் அதிகாலையில் இருபத்தியொரு தடவை அதை ஓத வேண்டும்.

(8) புன்னகை செய்யப் பழகுங்கள். நீண்ட ஆயுள் கிடைக்கும். சக அடியார்களுக்கும் 'சாயிராம்' சொல்லுங்கள், அவர்கள் முதலில் சொல்லட்டுமே என்று எதிர்பார்க்க வேண்டாம். நீங்களே முதலில் சொல்லி பகவானின் அருளைப் பெறுங்கள்.

(9) அவநம்பிக்கை வேண்டாம். உங்களைத் தூக்கிவிடுவதற்கு இறைவனின் இச்சா சக்தி உண்டு. இதுவே சங்கல்ப பலம் எனப்படுகிறது.

(10) நிர்வாக பதவியிலுள்ள ஒருவரின் முதல் நடவடிக்கை தியாகம் செய்வதாகும்.

(11) கட்டுப்பாடு என்பது கண்டிப்புடன் ஒழுங்கு விதிகளையும் வழிகாட்டல்களையும் பின்பற்றலாகும். கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்கும் போதுதான் கடமை உணர்வினால் பலன் ஏற்படும். கடமையுணர்வுக்கு அடிப்படை சாயியிலும், அவர் கூறும் நற்செய்திகளிலும் பற்று வைத்தலாகும். இந்தப் பற்றானது உங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கும் (S. S. S. பாகம் 10 பக்கம் 38).

(12) உங்கள் பதவியானது பகவானின் உயர் கட்டளைப் பணிக்கு ஒருவராய் நீங்களும் சேர்த்துக் கொள்ளப் பட்டதை உங்களுக்கு நினைவுபடுத்துகின்றது. சேவை செய்து அதன்மூலம் மெய்ஞ்ஞானம் பெற அதுவே திறவுகோலாகும். (S. S. S. பாகம் 10 பக்கம் 37)

(13) கருணையும் தியாகமும் உங்களின் இரு கண்களாகட்டும். அகங்கார மின்மை மூச்சாகட்டும். அன்பு நாக்காகட்டும். உங்கள் வாழ்க்கைக் குரிய ஆதார தத்துவங்கள் இவையே.

(14) சமித்தியில் நீங்கள் வகிக்கும் பதவியை மிக நல்லமுறையில் பிரயோசனப் படுத்த வேண்டும். அகங்காரத்தை வெல்லவும், மற்றவர்களை இறைவழிக்குத் திருப்பவும், இடர் இன்னல்களை நீக்கவும் அது பிரயோசனமாக வேண்டும். வெறும் பேச்சுப் பேசிக்கொண்டிருக்க வேண்டாம். மற்றவர்களுக்கு வழி காட்டும் முறைகளை நீங்கள் கடைப் பிடித்து ஒழுக வேண்டும். (S. S. S. பாகம் 8 பக்கம் 27)

(15) அடுத்தவர்களை அதிகாரம் செய்ய முற்படவேண்டாம். அவர்களுக்கு அனுகூலங்கள் செய்யும் வாய்ப்புகளைக் கண்டுபிடிக்க முற்படுங்கள். ஊழியராயிருங்கள் - அதாவது ஆண்டவனின் ஊழியராயிருங்கள். அப்போது எல்லா ஆற்றலும், மகிழ்ச்சியும் வந்து சேரும். எசமானனாக இருக்க விரும்பினால் சுற்றியுள்ள ஒவ்வொருவரிலும் அது பொறாமையை, கோபத்தை, பேராசையை உண்டு பண்ணும். பகவானின் கரங்களிலே நீங்கள் ஒரு கருவி என்பதை உணருங்கள். சிறந்த முறையில் அவர் உங்களை உருவாக்க விடுங்கள் (S S. S. பாகம் 6 பக்கம் 262)

(16) சின்ன விரல் பஜனை மண்டலி, மோதிர விரல் பாலவிகாஸ், நடு விரல் சேவாதளம். சுட்டு விரல் மகிள விபாக், சமித்தி பெரு விரல்.

(17) பகவானிலும், அவ்வண்ணம் அவர் தாபனங்களிலும் முழு நம்பிக்கையுடைய அங்கத்தவர்களையே தேர்ந்தெடுக்க வேண்டும். நற்குணம் வாய்ந்தவர்கள் என்ற மதிப்பு அவர்களுக்கு இருக்க வேண்டும். (S. S. S. பாகம் 6 பக்கம் 36)

(18) ஆத்மஞானம் என்ற குறிக்கோளை அடைய கடமையும் கட்டுப்பாடும் ராஜ பாட்டையாகும். மற்றப்படி உங்களைக் கட்டுப்படுத்தவோ, மட்டுப்படுத்தவோ, அடக்கி வைக்கவோ அல்ல. ஒவ்வொருவருக்கும் ஓர் ஆத்மா உண்டு. மனம் அலைந்து திரிந்து கலக்கம் அடைகிறது. அலையும் மனத்தை அடக்கவே கட்டுப்பாடுகளை அனுஷ்டிக்க வேண்டியுள்ளது. கடமையும், கட்டுப்பாடும் ஒருவருடைய சிந்தையைக் காக்கும் கவசம்.

(19) மனிதனானவன் தன்னகத்தின் இயல்பான தெய்வீகத்தைக் கண்டுபிடிக்க வகை செய்வதே ஸ்ரீ சத்திய சாயி தாபனத்தின் குறிக்கோளாகும். அவ்வகையில் அவன் தன் சொரூபத்தை மீண்டும் அடையப் பெறுகிறான், இறைவனிடம் நம்பிக்கையும், விசுவாசமும் வைத்திருங்கள். இந்த நிறுவனத்தின் மற்றைய குறிக்கோள் மக்களை மீண்டும் இந்த உண்மையை உணரவைத்து, அந்த உணர்வோடு வாழ்க்கையை நடத்தச் செய்வதாகும், சர்வ மதங்களினதும் ஒருமைப்பாடு சாயி தாபனத்தின் பிரதான கொள்கை. யார் மீதும் வெறுப்புக் கொள்ளவே வேண்டாம். ஒரே கடவுள் எல்லா உயிர்களகத்திலும் வாசம் செய்கிறார். சமித்திகளில் ஒரு புனித சூழ்நிலையை உருவாக்கி, ஆத்மீக சாதனையில் ஈடுபட்டு, உங்களைச் சுற்றி உள்ளவர்களுக்குச் சேவை செய்து வாருங்கள். அன்பே எமக்கு விருத்தி தருகிறது. அன்பைப் பரப்புங்கள். வேறெவ்விதமான மனப்பான்மைக்கும், உணர்ச்சிக்கும் சமித்திகளில் இடமில்லை. தெய்வீகம் காந்தம்; மனித சமுதாயம் இரும்பு; அன்பு இரண்டையும் ஒன்று சேர்க்கும் சக்தி. நரன் இரும்பு; நாராயணன் காந்தம்; பக்தி அல்லது அன்பு இருவரையும் ஒன்று சேர்க்கின்றது. மனிதனுக்கு இன்னல் தரும் அசாந்தி (அமைதியின்மை) மறைந்தொழிய வேண்டும். மனிதன் பிரசாந்தியை (ஆழ் அமைதி) அடைய வேணடும். எங்கள் தாபனத்தின் நோக்கம் இதுதான். (S. S. S. பாகம் 6 பக்கம் 248).

(20) உங்கள் அன்பை விரிவுபடுத்துவதும், உளமார்ந்த சேவை வாயிலாக உங்கள் செயல்திறன்களுக்கு ஒரு நெறிமுறையை உண்டுபண்ணுவதும் இத தாபனத்தின் உத்தேசமாகும். பக்தியை ஆடம்பரமாகக் காட்டவோ, அடியார்களை வலியச் சேர்க்கவோ, வியாபார ரீதியில் பணம் தேடவோ, அல்லது ஆதரவு திரட்டவோ திட்டமிடப்படவில்லை. தங்களுடைய உண்மை நிலையை (ஆத்மாவை) உணர்ந்து அதில் ஐக்கியமாகும் படியாக மக்களுக்கு முன்னேற்றகரமாக உதவிடும் மாபெரும் பணிக்குத் தன்னை அர்ப்பணிப்பதே தாபனத்தின் குறிக்கோளாகும். (S. S. S. பாகம் 3 பக்கம் 44)

(21) இறைவனிலிருந்து மனிதனைப் பிரித்து வேறுபடுத்தும் தடைகளை நீக்குவதே தாபனத்தின் நோக்கமென்று பதவியிலுள்ளவர்கள் உறுதி

யான நம்பிக்கை கொண்டிருக்க வேண்டும் - அதாவது மானவத்துவத்தை மாதவத்துவத்திடமிருந்து பிரிப்பது. மானிடம் என்பது இல்லை! எல்லாமே தெய்வீகம்! சமித்திகள் மனிதத்துவத்தை தெய்வத்துவம் ஆக்கவேண்டும் (S. S. S. பாகம் 7 பக்கம் 324)

(22) மனிதனை இறைவழியில் செலுத்தும் ஜபம், தியானம் மற்றும் சாதனை களில் ஈடுபாட்டை உண்டுபண்ண முயலவேண்டும். பஜனை, நாம ஸமரணைகளினால் பெறப்படும் மகிழ்ச்சி, சத் சங்கத்தினால் விளையும் சாநதி, இவை உங்களிடம் எடுததுக்காட்டாக விளங்க வேண்டும். நிராதரவானவர்களுக்கு, நோயுற்றவர்களுக்கு, நிலைகுலைந்து உள்ளவர்களுக்கு, எழுத்தறிவற்றவர்களுக்கு, முட்டுப்பட்டவர்களுக்கு நீங்கள் சேவை செய்து உதவ வேண்டும். உங்கள் சேவை காட்சிக்குரிய செயலாகக் கூடாது. நன்றியறிதலை அல்லது நன்றி கூறுதலை சேவை பெறுபவர்டம எதிர்பார்க்கக் கூடாது. சேவை ஒரு சாதனை! நல்லபடியாக வாழ்பவர்களுடைய அல்லது பணம் படைத்தவர்களுடைய பொழுதுபோக்கு அல்ல. (S. S. S. பாகம் பக்கம் 128)

(23) சேவைக்காக நீங்கள் தெரிவு செய்யும் வேலைகள் அந்தந்த இடத்துத் தேவையைப் பூர்த்திசெய்வதாகவும், கஷ்டத்தைத் தீர்ப்பதாகவும் இருக்க வேண்டும். (ச. சாரதி - ஜனவரி 1976 பக்கம் 265)

(24) கர்வம் தலைதூக்காமல் எச்சரிக்கையாக இருங்கள். அதிலும் ஆத்மீக வழியில் கர்வம் மிகவும் நச்சுத்தன்மையுடையது. அது கண்ணைக் குருடாக்கி அழிவுக்குக் கொண்டு செல்லும். சாயியின் தெய்வீகப் பணியான தர்ம ஸ்தாபனத்தில் நீங்கள் ஒரு கருவியாகப் பயன்படும் உணர்வு எப்போதும் இருக்கட்டும். அப்படிப் பயன்படும் வகையில் மேன் மேலும் திறமையை வளர்க்க முயலுங்கள். இறைவனின் கரங்களுககு எப்போதும் எப்படி கருவிகளைப் பயன்படுத்துவது என்பது தெரியும். (S. S. S. பாகம் 7 பக்கம் 181)

(25) பதவிதரும் பிரபலத்தை நாடாமல் பகவானின் அருளுக்காகப் பாடு படுங்கள. செருக்குறறு மனிதர்களை நோகப் பேசவேணடாம். பொறுப்பு என்ற பாரத்தைத் தோளில தூக்கி வைப்பதற்காகத தாழ்ந்து குனியவே வேணடும். சுவாமி ஆதியோடந்தம உங்களை நன்றாக அறிவார் (S.S.S. பாகம் 3 பக்கம் 154)

(26) சுவாமி எங்குமுள்ளவர், எல்லா வற்றையும் கவனிப்பவர், எல்லாம் அறிந்தவர் என்ற தீர்க்கமான நம்பிக்கையானது நேரான சாதனை மார்க்கத்தில் உங்களைச் செலுத்த வேண்டும். சேவை மனப்பான்மை, நூற்பயிற்சி, அன்பு, மரியாதை, சகிப்புத் தன்மை, பரஸ்பர ஒத்துழைப்பு, பொறுமை - இவை ஒவ்வொருவர் இதயத்திலும் பொங்கி எல்லோரிடத்தும் பெருகி ஓட வேண்டும். சாயி என்ற ஒரே உடலின் உறுப்புகளே நீங்கள். (S. S. S. பாகம் 7 பக்கம் 350)

(27) ஒருமை மனப்பான்மையை வளருங்கள்; பிரிவுபடும் சமூக மனப் பான்மையயல்ல, சமூக ரீதியான

எண்ணங்களின் பிடியில் சிக்குண்டால் நண்பர்களென்று சிலரிடம் ஒட்டிக் கொண்டும், வேறு சிலரிடமிருந்து ஒதுங்கியும் இருப்பீர்கள், இந்த மனப்போக்கு அனுக்கிரகத்தைப் பெற்றுத்தராது. ஒருமைப்பாட்டைக் காண்பவர் எவரோ அவரே அனுக்கிரகத்தைப் பெறுவார். இடைஞ்சல்களைப் பெரிதுபடுத்த வேண்டாம். சிரித்த முகத்தோடு தைரியமாகத் தாங்கிக் கொள்ளுங்கள், நோக்கம் அதியுயர்ந்ததாய் இருக்க வேண்டும்.

(28) சாதனை உளமார்ந்ததாய் இருக்க வேண்டும். மற்றவர்களைப் பார்த்துப் பாவனை செய்ய முற்பட வேண்டாம். உண்மையான ஆர்வத்தின் உந்துதலில் அது தோன்ற வேண்டும். போட்டி மனப்பான்மை அல்லது விளம்பர நோக்கத்தினால் தூண்டப்பட வேண்டாம் (S. S. S. பாகம் 7 பக்கம் 328).

(29) பக்தியும், நம்பிக்கையும் உள்ள எவரையாவது புறக்கணித்து உங்களுக்கு விரும்பியவர்களை அங்கத்தவர்களாக்குவது தெய்வ நிந்தனையாகும். பதவியிலுள்ள எவருடைய விருப்பு வெறுப்புகளையும் இந்தத் தாபனம் மதித்துப் போற்றுவதில்லை. பக்தியும் விசுவாசமுமே இதன் அடிப்படை, (S. S. S. பாகம் 7 பக்கம் 325)

(30) இனிமையாகவும், மென்மையாகவும் பேசி உணர்வுபூர்வமாக அனைவரையும் மதித்து, அனைவரிடத்தும் கவனிப்பும் செலுத்த வேண்டும். ஒரு தலைவரின் குணாம்சமாக அவர் நடத்தையிலே தன்னடக்கமும் சகிப்புத்தன்மையும் இருக்க வேண்டும். (S.S.S. பாகம் 10 பக்கம் 44)

(31) பதவி வகிப்பவர் என்றபடியால் காலத்துக்குக் காலம் உங்களை நீங்கள் எடைபோட்டுப் பார்க்க வேண்டும். எவ்வகையிலாவது முன்னேறி இருக்கிறீர்களா? உங்களிடம் உளப்பண்பாடு நிகழ்ந்துள்ளதா? இதய பூர்வமான அன்போடும், கருத்துறுதியோடும் தாபன நடவடிக்கைகளில் முழு ஈடுபாடு காட்டுகிறீர்களா? அல்லது மற்றவர்களின் நிர்ப்பந்தம் காரணமாக, ஏதோ பங்கு கொள்ள வேண்டுமென்று வெறுமனே ஈடுபட்டுக் கொண்டு போகின்றீர்களா? உங்கள் பங்களிப்பு மேலெழுந்தவாரியாக இருக்கக் கூடாது. அது சகஜமாக இதயத்திலிருந்து பொங்கி வரவேண்டும். எங்கள் தாபனத்துன் முக்கிய குறிக்கோள் உங்கள் எல்லோரிடமும் ஆத்ம விசுவாசத்தை மேம்படச் செய்து, வாழ்வின் உண்மை மதிப்புகளைப் புகட்டி, உங்கள் எடுத்துக்காட்டின் மூலம் உலகில் மற்றையோர் மத்தியிலும் அதைப் பரவச் செய்வதாகும்.

(32) ஒற்றுமை உணர்வினாலும், தியாக உள்ளத்தினாலும், கருணையின் நெகிழ்வினாலும் எல்லாக் குறிக்கோள்களையும் அடைய முடியும். ஆகவே சமித்திகள் சேவை ஈடுபாடுகளில் இதயபூர்வமாக ஊக்கத்தைச் செலுத்தி முன் செல்ல வேண்டும். (ச.சாரதி, டிசம்பர்-1981)

(33) ஜாதி, மதம், பணம், ஏழ்மை இவற்றின் அடிப்படையில் ஒருத்தரிலிருந்து ஒருத்தரைப் பாகுபடுத்தும் அல்லது வேறுபடுத்தும் எண்ணத்தை சமித்தியிலுள்ள ஒவ்வொரு அங்கத்தவரும் விட்டொழிக்க வேண்டும். உறுப்பினர்களின் துயரத்தில் பங்கு

கொள்ள எப்போதும் ஆவலுற வேண்டும். உங்களிடையே அற்ப மனவேறுபாடுகள் கிளம்பும் சந்தர்ப்பங்களைக் குறித்து சுவாமி விரும்புவது என்னவென்றால், அன்பையும் சகிப்புத்தன்மையையும் கொண்டு உங்களுக்குள்ளேயே அவற்றைச் சரி செய்து கொள்ளவேண்டும என்பதாகும். இதயத்தை விசாலப்படுத்துவதற்கும், பகவானின் பாதாரவிந்தங்களைச் சேர்வதற்கும் ஏற்ற பயிற்சியாக அன்பினை இவ்வாறு வெளிப்படுத்துகிறீர்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். (S. S. S. பாகம் 8 பக்கம் 318)

(34) மற்றவர்கள் செல்ல வேண்டும் என்று விரும்பும் பாதையில் தாங்கள் நடந்துகாட்டும் வழிகாட்டிகளே உத்தியோகத்தவர்களாவர். அவர்கள் உத்தரவு இடவோ தண்டிக்கவோ மாட்டார்கள். அவர்கள் செய்வது தூண்டுதலும் அறுவுறுத்தலும்தான். சமித்தியின் ஒவ்வொரு அங்கத்தினதும் நடவடிக்கை ஒவ்வொன்றுக்கும் உள்ளூக்கம் தருபவர் பகவானே! இந்த விடயத்தை உங்களில் பலர் உள்ளத்தில் வைத்திருப்பதில்லை. சாயியே ஒவ்வொரு பணியாளரையும் உள்நின்று ஊக்குகின்றார், ஒளியூட்டுகின்றார். உத்தியோகத்தருடைய அல்லது அங்கத்தவர்களுடைய மனத்துக்குத் தோன்றிய விதத்தில் சமித்தியின் உறுப்புகள் சுயேச்சையாகக் காரியம் ஆற்றக்கூடாது. ஒவ்வொரு அங்கமும் மற்றையதைச் சார்ந்துள்ளது. காலில் முள் குத்தும்போது கண்கள் நீரைச் சொரிகின்றன. பொறாமையையும், தற்பெருமையையும், வெறுப்பையும் உங்கள் இதயத்திலிருந்து அகற்றி அவ்விடத்தில் பிரேமையையும், சகஜ உணர்வையும் ஊன்றிவிடுங்கள். மற்றவர்களிடம் குற்றம் காணும் பழக்கத்தை விட்டு, உங்களிடம் உள்ள குற்றங் குறைகளைத் தேடிப் பாருங்கள். குற்றமற்றவர் ஒரு போதும் மற்றவர்களிடம் குற்றம் காணமாட்டார். (S. S. S. பாகம் 10 பக்கம் 222 - 224)

(35) சேஷ்டைக்காக அல்லது வீம்புக்காக வாக்குவாதம் செய்யவேண்டாம். உங்கள் வாய்மொழிகள் சொற்பமாகவும், நியாயமாகவும், பொருத்தமாகவும் இருக்கட்டும். மென்மையான பேச்சு வாழ்க்கைககு இனிமை தரும். உங்களுக்குள்ளே கலந்துரையாடும போது கூட பேச்சைக் குறைத்து, கண்ணியமாக நடந்துகொள்ளுங்கள். நீங்கள் பெற்ற பணிபபுரைகள் பொருத்தமற்றதாகவோ, உசிதமற்றதாகவோ இருப்பதாக ஐயுறவு ஏற்பட்டால தலைவர்களோடு மட்டும் அதைப்பற்றி சிநேகபூர்வமாக உரையாடுங்கள். அந்தப் பணிப்புரைகளை எவ்வகையிலும் அசட்டை செய்யவோ, திருத்தம் செய்யவோ வேண்டாம். தலைமை தாங்குபவர் பரந்துபட நிலவரத்தை அவதானிபபவராதலால் அவர் கூற்று உங்களுக்கு விளக்கமாகாததாய் இருக்கக்கூடும். (S. S. S. பாகம் 10 பக்கம் 37)

(36) அங்கத்தவர் மத்தியில் குழுமனப்பான்மையோ, ஏதும் போட்டியோ ஏற்படக் கூடாது. இப்பேர்ப்பட்ட செயல் சுவாமிக்குப் பிரீதியானதல்ல. தேவையற்ற இத்தகைய போக்கினால் சமித்தி மாசுறாதபடிக்கு தலைமைவகிப்பவர் விழிப்போடு எப்போதும் கண்காணிக்க வேண்டும். எல்லோரும் சாயி மாதாவின் புதல்வர்களும், புதல்விகளுமே என்பதை

நினைவில் வையுங்கள். தனது பிள்ளைகள் தங்களுக்குள்ளே சண்டையிட்டு குழுக்களாகப் பிரிந்து நிற்பதை அன்னை எப்படிப் பார்த்துக் கொண்டிருப்பாள். (S. S. S. பாகம் 2 பக்கம் 162)

(37) உண்மையே பேசவேண்டும் ஆனால் இனிய முறையில் பேசுங்கள். உண்மையைப் பேசினால் அது வருத்தத்தை மன வேதனையை உண்டு பண்ணுமாயின் மௌனத்தைக கடைப்பிடியுங்கள். பேச்சிலே வேஷம் குறும்புத்தி வேண்டாம். வெறுப்பை உண்டாக்குகின்ற உண்மையையோ, அல்லது விருப்பை உண்டாக்குகிற பொய்யையோ தவிர்த்து விடவும். (S. S. S. பாகம் 6 பக்கம் 45)

(38) நீங்கள் சமித்தியில் சேர்கிறீர்கள். பணிகளில் பங்கு பற்றுகிறீர்கள். இவையெல்லாம் உங்கள் பொருட்டே. சாயியின் பொருட்டோ, அவர் பெயரில் உள்ள சமித்தியின் பொருட்டோ அல்ல. இந்தத் தாபனத்தில் நுழைவதன் மூலம் பேர், புகழ், சமூக அந்தஸ்து அல்லது வேறேதும் லாபம் அடைய முடியும் என்று கருதுவீர்களாயின் இங்கே உங்களுக்கு இடமில்லை. இது சாதனைக்கு உரிய இடம். இடையறாது கண்ணும் கருத்துமாய்ச் சாதனை செய்ய வேண்டிய இடம். (S. S. S. பாகம் 8 பக்கம் 67)

(39) மனித சமுதாயத்துக்குச் செய்வதற்கென உங்களுக்குப் பணி உண்டு. அது என்னவென்றால் சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை என்ற விதைகளை பக்குவமடைந்த இதயங்களிலே ஊன்றுவது; சிறு கன்றுகளைப் பேணி வளர்ப்பது; அவை விருட்சங்களாகும் வரை அன்போடும் அக்கறையோடும் கவனிப்பது; சுவை மிகுந்த பழங்களாகப் பலன்தரும்போது எல்லோரையும் பங்குகொள்ளவைத்து ஊட்டம் பெறச் செய்வதுமாகும். கடந்துபோன யுகங்களில் முனிவர் பெருமக்கள் மனிதஜாதிக்கு இவ்வகையிலே உதவிபுரிந்தார்கள். ஆனால் இந்தப் பணி இதற்குமுன் எப்போதாவது இப்படி ஓர் ஒழுங்குபடுத்தப் பட்ட இயக்கமாக, முழு மனித சமுதாயமும் ஈடுபடுகிறவிதமாகஆனதில்லை. இவ்விதமாக ஆகாவிட்டால் அச்சம், கவலை, அநீதி ஆகியவற்றிலிருந்து விடுதலை என்பது கிடைக்காது. (ச. சாரதி—1976 ஜூன் பக்கம் 01)

(40) எங்களுடைய தாபனம் அன்பளிப்பையோ, ஆதரவாளர்களையோ நாடவில்லை. எசமானன் ஒருவரின் கீழ் இது இயங்குகின்றது. அவர் எங்கும், எக்காலத்தும் உள்ளவர். அவருடைய அனுக்கிரகத்தைப் பெற்றுத் தரும் பணிகளை பக்தி பூர்வமாக ஆற்றும் ஒரு மக்கள் கூட்டத்துக்கு இடப்பட்டதே இப் பெயராகும்! இங்கே தட்டிக் கழிப்புக்கோ, தனிப்பட்ட போட்டிக்கோ இடமபம் என்ற நோய்க் கிருமிக்கோ வாய்ப்பு இல்லை. ஒழுங்குகளைப் பின்பற்றுங்கள்! உதாரண புருஷர்களாகவும், உள்ளுக்கம் தருபவர்களாகவும் ஆவீர்கள். சேவையாற்றுங்கள்!- இறைநாட்டம் உடையவர்களை இறைவனின் இதயத்தானத்துக்கே வழிநடத்தி வருவீர்கள். அடக்கமாயிருங்கள். சுமுகமாகப் பழகுங்கள். பக்தி பலரறியப் பறைசாற்றக் கூடாதது. அது யாருமறியாத பேறு. (.SS . S. பாகம் 3 பக்கம் 156)

(41) சாயி சொரூபத்திலும், நாமத்திலும், அவதாரத்திலும் அசையாத நம்பிக்கை இருக்கவேண்டும். பற்றின்மை, கள்ளங்கபடமற்ற வாழ்க்கை முறை, நிலையான சாதனை, சாயி நூற் பயிற்சி—இவை ஒருவர் சமித்திகளில் அங்கத்துவம்பெற ஏதுவான லட்சணங்களாகும். துறவு செய்! குவிக்காதே! அருளைப் பெறும் வழி அதுவே. பென் அடெம் (Ben Adhem) என்னும் அடியார்பற்றி ஒரு விடயம். அவர் இறை தூதன் குறித்து வைத்திருந்த பட்டியலைப் பார்த்தார். இறைவனால் நேசிக்கப் படுபவர்களின் பட்டியலில் அவர் பெயர் இருந்தது. ஆனால் இறைவனை நேசிப்பவர்களின் பட்டியலில் அவர் பெயர் எங்கும் இருக்கவில்லை. அவர் இறைவனை நேசிக்கவில்லை, மனிதரை நேசித்தார். அதுவே இறைவனின் அருளைப் பெறப் போதுமானதாய் இருந்தது (S. S. S. பாகம் 7 - பக்கம் 180)

(42) ஒவ்வொரு உத்தியோகத்தரும் பதவியை ஏற்று பணிகளில் ஈடுபட முன் இதயபூர்வமாக ஒரு சத்தியப் பிரமாணம் செய்துகொள்ள வேண்டும்: 'சுவாமி! நீங்கள் விதித்துள்ள தகுதிகளுக்கு பாதகம் ஏற்படும் வகையில் எந்தத் தப்பும் தவறும் நிகழாதவண்ணம் என்னைக் காத்தருளுங்கள். எனது ஈடேற்றத்துக்காக என்னை அர்ப்பணித்துச் செய்யும் பணிகளுக்கு அவசியமான திறனையும், விவேகத்தையும், ஆர்வத்தையும் அளித்து ஆசிர்வதியுங்கள். செம்மையான வழியிலே என்னைச் செலுத்துங்கள். எடுத்துக் கொண்ட முயற்சியில் நேர்மையான ஒரு பெயரை எடுக்கும்படி என்மீது அருளைப் பொழியுங்கள். மோசம் செய்யும் ஆசையிலிருந்தும், தப்பான நடவடிக்கையிலிருந்தும் என்னைக் காப்பாற்றுங்கள்.' விடியற்காலையில் துயிலெழும் வேளையில் இப்படிப் பிரார்த்திக்க வேண்டும்.

இரவு படுக்கப்போகும் போது அன்றைய நடவடிக்கைகளை அசைபோடுங்கள். ஆராய்ந்து பாருங்கள். அங்கத்தவருககுரிய வரையறைகள் எதனையும் மீறியுள்ளீர்களா? எண்ணாப்பிரகாரமாக பிழை ஏதும் ஏற்பட்டிருந்தால் மீண்டும் அது நேராவண்ணம் இறைவனை வேண்டுங்கள். இவ்விதமான இலட்சியங்களோடும், அர்ப்பணிப்போடும் எதிர் வரும் பணிகளையும் முடிக்க நிச்சயம் செய்யுங்கள். (S, S. S. பாகம் 3 பக்கம 29, 30)

(43) கடமை, கட்டுப்பாடு, பக்தியுணர்வு - இவை மூன்றும் எமது தாபனத்தன் அங்கத்தவர் ஒவ்வொருவருக்கும் முழுககு முழுக்க அவசியமானவையாகும். உங்களிடம் ஒப்புவித்த கடமையை நீங்கள் நிறைவேற்றலாம. ஆனால் கட்டுப்பாட்டில் நீங்கள் ஊறியிருந்தாலொழிய மற்றைய இரண்டும் பயனற்றவையே. சுவாமி நடைபாதை வழியாக நடந்து வரும் வேளையில் சில அடியார்கள் ஓடோடி முன்னுக்கு வந்து மற்றவர் மேல் விழுந்து, கரங்களை நீட்டி சுவாமியின் தாமரைப் பாதங்களைத் தொடுவதற்கு முயற்சிக்கிறார்கள். கட்டுப்பாட்டை மீறிய பக்திக்கு இது திட்டவட்டமான ஓர் உதாரணமாகும். இந்தத் தாபனத்தின் அங்கத்தவர் என்ற முறையில் நீங்கள் கைக்கொள்ளும் நடவடிக்கைகளை மாத்திரமன்றி, உங்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு செயலையும் கட்டுப்பாடாக ஒழுங்குபடுத்த வேண்டும், அமைவுபடுத்த வேண்டும். (S. S. S. பாகம் 9 பக்கம் 14)

(44) கடமை என்பது உங்களுக்கு உள்ள பொறுப்பு. அது உங்கள் போக்காலும், பேச்சாலும், நடத்தையாலும் செயற்பாட்டாலும் யாருக்கும் இடைஞ்சலோ, கெடுதியோ செய்வதற்குரியதல்ல. பெரிய கோலைச் சுழற்றிக்கொண்டு தெருவிலே நடந்து போகிறவர் பின்னால் வருகிற மனிதனைப் பற்றிய சிந்தை உள்ளவராய் இருக்க வேண்டும். கோலைச் சுழற்றுகிற சுதந்திரம் உங்களுக்கு இருக்குமானால், அதே சுதந்திரம் மற்றவருக்கும் உண்டு. அதனால் இருவரும் ஒருவருக்கு ஒருவர் கடமை இருப்பதாகக் கருதி நடக்க வேண்டும். (S. S. S. பாகம் 10 பக்கம் 46)

(45) கட்டுப்பாட்டையும், கடமையுணர்வையும் சுவாமி விதித்துள்ளது உங்கள் நன்மைக்காகவே. ஒழுங்கு விதி படைப்பின் உள்ளியல்பாய் உள்ளது. சமுத்திரங்கள் எல்லைக்குள் நிற்கின்றன. காற்றும், தீயும் வரம்பு வரையறைகளை மதித்து அடங்குகின்றன. சுரம் ஏற்படாத வண்ணம் மானிட உடல் வெப்பத்தை 98 பாகைக்குள் வைத்துப் பேணுகின்றது. பூரணத்துவம் அடைவதற்கு ஓரளவு ஒழுங்குகளும், விதிமுறைகளும் அவசியமே. (S. S. S. பாகம் 10 பக்கம் 45)

(46) சுவாமி விதித்துள்ள ஒழுங்கு விதிகள் உங்களில் சிலருக்கு கத்தி பாய்ச்சுவது போல அல்லது சம்மட்டி அடிபோலத் தோன்றலாம். நோக்கம் நோயைத் தீர்ப்பதாகும், விட்டுப்போனதை ஒட்டுவதாகும். ஒழுங்கு விதிகளுக்குப் பணிந்து உளமார அனுசரித்து நடவுங்கள். உங்கள் பாதை பூவிதழ்கள் தூவியதுபோல மிருதுவாகவும் சுலபமாகவும் இருக்கும். அனுசரிப்பவர்களை ஆசீர்வதிக்கின்றேன்! கட்டுப்பாட்டுணர்வினாலும், பக்தியினாலும் விளையும் நன்மைகளை அவர்கள் பெறுவார்கள்! (S. S. S. பாகம் 13 பக்கம் 76)

(47) பக்தியோடும், கட்டுப்பாட்டோடும் கடமையைச் செய்தல்; உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிதல், அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல், பேரன்போடு போடப்படும் வரையறைகளுக்கு அடங்கி நடத்தல் - இதுவே சுவாமியின் அனுக்கிரகத்தைப் பெறும் தலையாய மார்க்கமாகும். (S. S. S. பாகம் 9 பக்கம் 131)

(48) பொறுமையின்மையை அல்லது கோபத்தை வெளிக்காட்ட வேண்டாம். உங்களுடைய உறவு, சாதி, குலம், மொழி இவற்றின் நிமித்தம் ஒருதலைப்பட்சமாக நடந்து, அப்படியில்லாதவர்களுக்கு அவமரியாதையோ, அலட்சியமோ காட்டவேண்டாம். எல்லா விடயங்களிலும் சுவாமிக்குப் பிரீதியானது எதுவோ அதைக் கண்டுபிடிக்க முயற்சித்து அதன்படி நடக்கப் பாருங்கள். யாரும் உங்களைக் கவனிக்கிறார்களோ இல்லையோ, ஆனால், இப்பொழுதோ இங்கேயோ, வேறெப்பொழுதுமோ வேறெங்குமோ சுவாமி உங்களுடனேயே இருப்பார்! கண்ணைக் கட்டி, பம்மாத்துப் பண்ணி சுவாமியை ஏமாற்றலாம் என்று ஒருபோதும் முயல வேண்டாம். (S. S. S. பாகம் 7 பக்கம் 96)

(49) எருமையின் முதுகில் குந்தி இருக்கும் காகம் அதன் உடலிலுள்ள பச்சைப் புண்ணிலே அலகினால் குத்திப்

பார்க்கும். தனது அலகு ஏற்படுத்தும் வலியைப் பற்றிய எண்ணம் அதற்கு இல்லை. பதவியிலுள்ளவர்கள் தங்களுடைய சுடுசொற்கள் அல்லது வெறுப்பை, கசப்பைக் குறிக்கும் சைகைகள் ஏற்படுத்தும் வேதனையை அறியார்கள். அந்த இடத்தில் நீங்கள் இருந்தால் அப்படியானதொரு சைகை உங்களுக்கு என்ன செய்யும் என்பதை எண்ணிப் பாருங்கள். எனவே அதைத் தவிர்த்து விடுங்கள். எப்பொழுதும் மற்றவருடைய நிலைமையில் உங்களை நிறுத்திப் பார்க்க முயற்சித்து, உங்கள் செயல்களை அந்தப் பின்னணியில் சீர்தூக்கிப் பாருங்கள். பின் தப்புச் செய்ய மாட்டீர்கள். (S.S.S. பாகம் 7 பக்கம் 96)

(50) உங்கள் கடமைகளைச் செய்வதன் மூலம் நீங்கள் கர்ம பந்தங்களை உண்டுபண்ணவில்லை. நீங்கள் செய்யும் சேவைப் பணி அனைத்தும் ஆண்டவன் பொருட்டாகவே. உங்கள் செயற்பாடுகள் அனைத்தையும் அகங்காரப் பற்றில்லாமல் பகவான் திருவடிகளில் காணிக்கையாகச் சமர்ப்பிப்பதால் அவற்றின் விளைவுகள் தளைகளை ஏற்படுத்தா. நீங்கள் சுயாதீனமானவர்; விடுதலை பெற்றவர்; உங்களுக்கு மோட்சப் பதவி கிட்டும்.
(S. S. S. பாகம் 6 பக்கம் 93).

(S. S. S.: SATHYA SAI SPEAKS)

## ஈஸ்வரம்மா

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவாக அவதரித்துள்ள இறைவன் தெரிந்தெடுத்த அன்னை, ஈஸ்வரம்மா. அவர் மிகவும் மென்மையான இதயம் படைத்தவர், பக்தை. மாயையில் இருந்து விடுபட்டு மகேசனை அடைய அவர் சிரமத்துடன் தனது வாழ்வையே சாதனைக் களமாக மாற்றினார். அவதார புருஷரின் அன்னையின் வாழ்க்கையை நாம் படிக்கும்போது, சத்யா என்ற மானிடக் குழந்தையின் தாய் என்ற நிலையிலிருந்து அவதார புருஷராம் பாபாவின் தெய்வீகத் தாயாக, உலக சாயி குடும்பத்தின் தாயாராக, நிபந்தனையில்லாத அன்பைச் செலுத்தும் உலகத் தாயாக, அகிலாண்டேஸ்வரியாக எங்ஙனம் வளர்ந்து உயர்ந்தார் என்பதைக் காணமுடிகிறது.

சத்யா குழந்தையாக இருந்த சமயத்தில் ஒரு அசாதாரணக் குழந்தையாக விளங்கினான். எந்த ஒரு உடுப்பையோ, உணவையோ விரும்பிக் கேட்பதில்லை. வீட்டை விட்டு வெளியே போய்விட்டால் வேடிக்கையும், சிரிப்புமாக இருக்கும். சத்யா வீட்டிற்குத் திரும்பியதும் உம்மென்று ஆகிவிடுவான். பிறர் தனக்குச் செய்யும் தீமைகளை அவன் ஒருபோதும் புகார் செய்ததில்லை. சிறுவயதிலேயே விருப்பு வெறுப்பற்றவனாக விளங்கினான். இது ஈஸ்வரம்மாவைப் பெரிதும் வருத்தியது. சக மாணவர்கள், ஊரவர்கள், ஆசிரியர்கள் எல்லோரினதும் பாராட்டுக்கும் பயபக்திக்கும், நேசத்திற்கும் உரிய நாயகனாக சத்யா மாறினார். ஈஸ்வரம்மா பாசம், வியப்பு, புதிர்,

எச்சரிக்கை ஆகிய உணர்வுகளால் அலைக் கழிக்கப்பட்டார். தெய்வத்தின் அருளால் தனது மகன் சத்யா சாதாரண பையனாக மாற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பார். அவனுடைய ஆற்றல் களை அவரால் காண முடிந்தது. கவிஞனாக, பாடகனாக, நாடகக் காரனாக, கதாசிரியனாகத் திகழ்ந்த சத்யா நோய்வாய்ப்பட்டு விட்டால், பிறர் கண்ணூறு, நாவூறு என்று கலங்கு வார்.

சத்யா உயர்நிலைக் கல்விக்காகத் தமையனார் வீட்டிற்கு போவதையிட்டு அவர் மனங் கலங்கினார். தனது அருமை மகனின் செயல்களை ஆவிகளின் செயல் களாகப் பிறர் ஏளனஞ் செய்யக் கூடும் என்று பயந்தார். உரவகொண்டாவில் குடிநீர் சுமந்து ஏற்பட்ட தழும்புகளைக் கண்டு கவலைகொண்ட தாய் மகனிடம் பின்வருமாறு கூறலானார். 'நீ அங்கிருந்து கட்டாயம் வந்துவிட வேண்டும். உனது நல்லியல்புகளையும் சேவை செய்யும் ஆவலையும் அடிப்படையாகக் கொண்டு அவர்கள் உன்னைச் சக்கையாகப் பிழிந் தெடுக்கிறார்கள். அதற்கு பாபா 'அம்மா நான் அவதரித்ததே இந்தச் சேவை செய் வதற்காகத் தான்' என்றார். ஈஸ்வரம்மா மௌனித்துவிட்டார். அவருக்குள் ஒரு போராட்டம். தான் விரும்பிய நோக்கில் சத்தியாவைப் பற்றி மனதில் காட்சி களைக் கொண்டு வர முயற்சித்தார். ஆனால் அதே சமயம் அவனுடைய விருப் பப்படி தெய்வீகமாக அமர்ந்திருக்கும் காட்சிகளையும் அவரால் மறக்க முடிய வில்லை.

உரவகொண்டாவில் தன்னுடைய அவதாரப் பிரகடனம் செய்த பின் பால சாயி அமர்ந்திருக்கிறார். மாலைகள், மலர்கள் குவிந்துள்ளன. நாடி ஓடி வரும் பெற்றோரைப் பார்த்து மாயை என் கிறார் பால சாயி. அன்னையோ அதிர்ச்சியால் மயங்குகிறார். தந்தைக்கு உண்மை புரிகிறது. மனைவியைத் தேற்ற முயல்கிறார். தாயுள்ளம் அதை ஏற்குமா? சினம் கொண்டு மறுக்கிறார். என் சத்யா என்னுடன் பேச மாட்டாயா? என்று கெஞ்சுகிறார், தன் அன்பு வலைக்குள், பாச வலைக்குள் மகனைச் சிக்க வைக்க வேண்டும் என்பதே அவ்வன்னையின் நோக்கமாக இருந்தது. தனது மகன் ஒல்லியாக, தனியாக, பரட்டைத் தலை யுடன், அரைகுறை ஆடையுடன், தாடி மீசையுடன் ஞான ஒளி வீசும் கண்களுடன் இருக்கப் போகும் காட்சியை கற்பனை செய்யவே முடியவில்லை.

எனவே சத்யாவிடம் கெஞ்சி மன்றா டுகிறார். 'நீ எங்களை விட்டுப் போகக் கூடாது. புட்டபர்த்தியில் தான் தங்க வேண்டும். இந்த உறுதி மொழியை எனக்குத்தா. உனது பக்தர்கள் வரட்டும் நாங்கள் அவர்களை மகிழ்ச்சியுடன் வர வேற்று அன்புடன் நடத்துகிறோம்' என்று வரம் கேட்டார். சத்யா சட்டென புட்டபர்த்தியைத் தான் எனது க்ஷேத்திர மாக நான் தேர்ந்தெடுக்கிறேன் என்று பதிலளித்தார். ஈஸ்வரம்மாவுக்கோ மகிழ்ச்சி கரைகொள்ளவில்லை. தனது மகனை நன்றாகப் பேணலாம். தன் வாழ் நாள் முழுவதும் மகனின் மகிமையைக் கண்டு களிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது என்று மனம் மகிழ்ந்தார். மகனின் மெய்ப் பொருள் தன்மையை நன்றாகப் புரிந்து கொண்டதால் இறைவனின் பாதங் களாகவே அவருடைய பாதங்களை ஏற்றுக் கொண்டார்.

காலப்போக்கில் சத்யா மேன்மேலும் பக்தர்களின் உடமையாகிக் கொண்டிருந் தார். அவரது குடும்ப அங்கத்தவர் பக்தர் களுடன் வந்தால் தான் அவருடன் தொடர்பு கொள்ள முடியும். பாபாவைக்

குருவாகக் கொண்ட ஒரு பக்தர் கூட்டம் அவரைப் பராமரித்தது. அவ்வப்போது ஈஸ்வரம்மா அங்கே செல்வார். உங்கள் சுவாமி எப்படி இருக்கிறார்? அவரது உடனலம் நன்றாக இருக்கிறதா? என்றெல்லாம் விசாரிப்பார். அவரை நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள். தொண்டு செய்யுங்கள் என்பார். அத் தாயுள்ளம் தன் தனயன் பிறருக்காக வாழ்கிறானே, மெலிந்து எலும்பெல்லாம் எண்ணும் வகையில் இருக்கிறதே எனத் தவியாய்த் தவிக்கும். ஆனால் ஆண்டுகள் செல்லச் செல்ல சகலவிதமான வல்லமை, அன்பு, ஆற்றல், விவேகம் முதலியவற்றின் மூல ஊற்றாக இருப்பவர் ஸ்வாமி என்பதையும் எல்லா உயிர்களையும் காப்பாற்றும் தந்தையாகத் திகழ்பவன் உண்மையில் தனது மகனே என்பதையும் ஈஸ்வரம்மா உணர்ந்து கொண்டார்.

ஈஸ்வரம்மா சத்யாவை ஸ்வாமி! என்று ஏற்று அழைக்கத் தொடங்கியதும், சத்யா சற்று அருகில் வருவது அவருக்குப் புரிந்தது. மெதுவாக, உறுதியாக அவர் பாசத் தளையிலிருந்து விடுபட்டு பக்தையாக மாறினார். அவளுடைய பார்வையை மேலும் பரந்து விரியச் செய்யும் நோக்குடன் பாபா தன்னுடன் அவரையும் பல ஸ்தலங்களுக்கும் அழைத்துச் சென்றார். அவர் பெற்ற அநுபவங்கள் அவர் போக்கையும் நோக்கையும் மேலும் விரிவுபடுத்தியது. தொடர்ந்து அவர் பெற்ற அநுபவங்கள் சத்யாவின் தாய் என்ற மயக்கத்திலிருந்து விடுபட்டு ஈஸ்வரனின் தாய், (ஈஸ்வரம்மா) எனும் உண்மை நிலைக்கு உயர்த்த பெரிதும் உதவின. பக்தர்கள் ஸ்வாமியிடம் பெற்ற அன்பு, கற்ற போதனையுடன் ஈஸ்வரம்மாவை அணுகிய போது அவரது யோசனைகள் நன்றாக அமைந்தன.

ஒரு இந்துக் கூட்டுக் குடும்பப் பெண்மணியாக விளங்கிய ஈஸ்வரம்மாவுக்கு, அவ்வமைப்பு முறையே தெய்வீகம், அமைதி, மரியாதை, ஒழுங்கு முதலிய பண்புகளை உருவாக்கின. அவர் இனிமையாகப் பேசினார். அன்பாக நடந்தார். வாழ்க்கையே ஒரு சோதனைக் களம். அந்தக் களத்தில் வெற்றி பெற வேண்டுமாயின் ஸ்வாமியின் பாதங்களில் சரணாகதி அடைதலே மிக இலகுவானதும் எளிமையானதுமான வழி என்பதை ஈஸ்வரம்மாவின் வாழ்வு எடுத்துக்காட்டுகிறது. அதனாலேயே இறுதி நேரத்தில் ஸ்வாமி! ஸ்வாமி! ஸ்வாமி! என்று அவரால் பகவானை அழைக்க முடிந்தது. ஸ்வாமியும் வருகிறேன்! வருகிறேன்! வருகிறேன்! என்று கூறி அவரை ஆட்கொண்டார். பாசமிகு தாயாரான ஈஸ்வரம்மாவை பிரேமை நிறைந்த உலகத் தாயாக மாற்றியமைத்தார் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா.

திருமதி சி. இரவீந்திரன்

தாயிற் சிறந்த ஒரு கோயிலும் இல்லை
பொன்மொழி அன்பளிப்பு:
அமரர் திருமதி நாகரத்தினம் வேலாயுதபிள்ளை நினைவாக
மகன்மார் — ஸ்ரீ வே. சேனாதிராசா
*Dr*. வே. குகமூர்த்தி
ஸ்ரீ வே. காசிநாதன்

# இடம் பெயர்ந்தோருக்குச் சேவை

## 1. வவுனியாவில் இலைக்கஞ்சி தானம்

ஏறத்தாழ 11,000 இடம் பெயர்ந்தோர் சென்ற நவம்பர் மாதம், யாழ். குடாநாட்டிலிருந்து வவுனியா வந்து 10 அகதி முகாம்களில் தங்கினர். இவர்களிடையே 600 ஐந்து வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் போஷாக்குக் குறைவினால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார்கள், பகவானின் 71ஆவது பிறந்த நாள் (23 நவம்பர்96) தொடக்கம் இந்தக் குழந்தைகளுக்கு வவுனியா பகவான் ஸ்ரீ சத்ய சேவா நிலையத்தினரால் தினமும் இலைக் கஞ்சி அளிக்கப்பட்டுவருகிறது. இலைக் கஞ்சி 7 - 8 விதமான கீரை இலை வகைகளைக் கொண்டது; புரதம், வைற்றமின்கள், இரும்புச் சதது ஆகியவை மிகவும் நிறைந்தது. இலை வகைகள் தேங்காய்ப் பாலுடன் மசியப்பட்டு தீட்டப்படாத அரிசியுடன் கஞ்சி செய்யப்படுகிறது, நல்ல சுவையுள்ள இந்த சத்துணவை அன்புடனும் பக்தியுடனும் நிலையத்தின் சேவைப் பகுதியின் ஆணகளும் பெண்களும் வழங்கும் போது மக்கள் பெரிதும் வரவேற்றுப் பயனடைகின்றனர்.

இந்த சேவையின் மாதாந்தச் செலவு ரூபா 13,500 ஆகும். ஆனால், அதனால் வரும் பலனையோ கணக்கிட முடியுமா?

குறிப்பு: சத்துள்ள இலைக் கஞ்சி தயாரிக்கும் முறையை அறிய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டியது: ஸ்ரீ S. முத்துலிங்கம், தலைவர், பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையம், பிரசாந்தி வீதி, வவுனியா.

## 2. யாழ்ப்பாணத்தில் அரிசி, ஆடை, அணி.

இடம் பெயர்ந்து வன்னியிலிருந்து திரும்பி வந்து மீள யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் குடியமர்ந்த மக்களுக்கு யாழ்பாணம் பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தித் தொண்டர்களால் அரிசி, ஆடை, அணி முதலியன வழங்கப்பட்டன.

விவரங்கள் பின்வருமாறு:-

1ஆவது கட்டம்

259 அங்கத்தவர்களைக் கொண்ட 65 குடும்பங்களுக்கு 271 கிலோ குத்தரிசி உடுப்புக்கள் முதலியன கொலணி காந்தி சனசமூக நிலையம், திருநெல்வேலியில் (28 - 03 - 97) வெள்ளிக்கிழமையன்று வழங்கப்பட்டன.

2ஆவது கட்டம்

402 அங்கத்தவர்களைக் கொண்ட 104 குடும்பங்களுக்கு 436 கிலோ அரிசி, உடுப்புகள், பிஸ்கற் முதலியன யோகபுரம், செல்வபுரம், கோப்பாயில் 05 - 04 - 97 சனிக்கிழமையன்று வழங்கப்பட்டன.

3ஆவது கட்டம்

204 அங்கத்தவர்களைக் கொண்ட 51 குடும்பங்களுக்கு 235கிலோ அரிசி, உடுப்புகள், பிஸ்கற், சவர்க்காரம், தீப்பெட்டி முதலியன வழங்கப்பட்டன. இப் பொருட்கள் கோப்பாய் சாயி நிலையத்தில் வைத்து 12 - 04 - 97 சனிக்கிழமையன்று வழங்கப்பட்டன. உதவி பெற்ற மொத்தக் குடும்பங்கள் 220. உதவிபெற்ற மொத்தக் குடும்ப அங்கத்தவர்கள் 865.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா சமித்தி,
யாழ்ப்பாணம்,

## 3. ஸ்ரீ சத்திய சாயி பொதுசன நூலகம் — பருத்தித்துறை

பருத்தித்துறை நகர மத்தியில், சந்தடியின்றி அமைதி சூழ்ந்த இடத்தில், மும்மொழிகளிலும் நூல்களைக் கொண்டு அமைந்துள்ள சத்திய சாயி இலக்கிய நூலகம், வடபிராந்திய சாயி நிலையங்களின் இணைப்புக் குழுவினால் நடத்தப்படுகிறது. இலங்கை வங்கிக் கிளையைக் கடந்துபோக எதிர்ப்படும் இந்த நூலகம் இலங்கையிலுள்ள ஒரே ஒரு சத்திய சாயி பொதுசன நூலகமாகும்.

நூலகத்திலுள்ள அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், மலேசியா, அவுஸ்திரேலியா போன்ற பிறநாட்டு சஞ்சிகைகளும் பிரசுரங்களும் நிழற் படங்களுடன் தரும் தகவல்கள் பக்தர்கள் அல்லாதவர்களையும் ஆச்சரியத்துள் ஆழ்த்துகின்றன.

பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நூலான 'சத்தியம் சிவம் சுந்தரம்' (பாகம் 1-4) பகவான் அருளுரைத் தொகுப்புகள், ஆத்மீக உண்மைகளை விளக்கி பகவான் எழுதிய 'வாஹினி' நூற் தொடர்கள், பகவானைப் பற்றிப் பன்னாட்டுப் பக்தர்களும், அறிஞர்களும் எழுதிய நூல்கள், இலங்கையில் பல பாகங்களிலிருந்தும் வெளியிடப்பட்ட சாயி நூல்கள் இவையெல்லாம் சாயி அடியார்களுக்கும், ஆத்மீக நாட்டமுடையவர்களுக்கும், அறிவுப் பசி கொண்டவர்களுக்கும் அரிய விருந்தாகும்.

இந்த நூலகத்தில் சாயியின் படங்கள், அணிமணிகள், புத்தகங்கள், சாயி மார்க்கம் சஞ்சிகை முதலியன விற்பனைக்கும் உண்டு. ஞாயிற்றுக்கிழமைகளையும் பொதுவிடுமுறை தினங்களையும் தவிர்ந்த அனைத்து எல்லா நாட்களிலும் காலை 10.30 மணிக்குத் திறக்கப்படும் நூலகம் பிற்பகல் 2.00 மணிக்கு மூடப்படுகிறது.

## 4. சிறுவர் விழா — 1997

ஏப்பிரல் மாதம் 19ஆம் திகதி யாழ்ப்பாண நிலையத்தில் வடபிராந்திய எல்லா நிலைய சாயி ஆன்மீகக் கல்வி வகுப்பு மாணவர்களும் கூடிய, சிறுவர் விழாவைச் சிறப்பாக நடாத்தினார்கள். இவ் விழாவில் சிறுவர்களின் பஜனை, கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெற்றன. அத்துடன் கடந்த வருடம் டிசெம்பர் மாதத்தில் இடம்பெற்ற பிரிவு I, II மாணவர்களின் சாயி ஆன்மீகக் கல்விப் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான மெடல்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. அத்துடன் இளைஞர் பிரிவினால் நடாத்தப்பெற்ற 'சத்தியமே வெல்லும்' கட்டுரைப் போட்டியில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற எல்லாப் பாடசாலை மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இளைஞர் பிரிவு கட்டுரைப் போட்டியில் இரண்டாம் கட்டமாக 80க்கு மேல் புள்ளிகள் பெற்றவர்களுக்கிடையே ஓர் கட்டுரைப்போட்டி நடாத்தப்பட்டது. 'கல்வியின் விளைவு ஒழுக்கம்' என்ற தலைப்பு பரீட்சை மண்டபத்தில் வைத்தே கொடுக்கப்பட்டு எழுதும்படி கேட்கப்பட்டது. இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெங்கலப்பதக்கம் என்பன வழங்கப்படவுள்ளன.

## கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்றோர் விபரம்

ஜீ, சீ. ஈ. ( உயர்தரம் )

(1) செல்வி வனஜா நடராசா — அத்தியார் இந்துக் கல்லூரி
(2) செல்வி உமா தங்கவேல் — வட இந்து மகளிர் கல்லூரி
(3) செல்வன் வேலும்மயிலும் நந்தகுமார் — ஹாட்லி கல்லூரி

ஜீ. சீ, ஈ. ( சாதாரணம் )

(1) செல்வி மாதங்கி பாலசுப்பிரமணியம் — வட இந்து மகளிர் கல்லூரி
(2) செல்வி சுமதி சோதி நாகரத்தினம் — மெதடிஸ்ற் மகளிர் கல்லூரி,
(3) செல்வி வித்தியா குமாரசாமி — புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி
செல்வி சோபனா பாலச்சந்திரன் — வட இந்து மகளிர் கல்லூரி
செல்வி ஜெயந்தி கணேசலிங்கம் — மெதடிஸ்ற் மகளிர் கல்லூரி

## 5. தர்ம ஆண்டு விசேட வேண்டுகோள்

நாம் ஒவ்வொருவரும் பல்வேறு பாத்திரங்களை வகிக்கிறோம். தகப்பனாக / தாயாக, கணவனாக / மனைவியாக, மகனாக / மகளாக, காரியாலய வேலை செய்பவராக, ஆசிரியராக (குரு), சாயி பக்தராக / அங்கத்தவராக, இளைஞராக, எல்லா நிலையிலுமுள்ள சாயி தலைவர்களாக, இப்படி எத்தனையோ பாத்திரங்கள். இப்படி ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஒரு தர்மம் உண்டு. இந்த தர்மங்கள் பற்றி பகவான் பாபா தனது உரைகளில் கூறியுள்ளார். இவை சாயி ஸ்பீக்ஸ், கோடை அருள்மழைகள், சனாதன சாரதி ஆகிய நூல்களில் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு சாயி பக்தரும் இந்த நூல்களை வாசித்து மேற்சொன்ன பாத்திரங்களின் தர்மத்தை உணரும்முகமாக இப்பகுதிகளை எழுதி அனுப்பினால் இவற்றைத் தொகுத்து ஒரு நூலாக வெளியிடலாமென ஆலோசிக்கப் படுகிறது.

ஸ்ரீ *S. R.* சரவணபவன்
வடபிராந்திய ஆன்மிக
இணைப்பாளர்
பிள்ளையார் கோவிலடி,
தாவடி.

## 6, தம்பிலுவில் நிலையத்தின் 17ஆவது ஆண்டுவிழா

இந்நிலையத்தின் 17ஆவது ஆண்டுவிழா 08 - 06 - 97 ஞாயிறு அன்று விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. கிழக்குப் பிராந்திய இணைப்புக்குழுத் தலைவர் ஸ்ரீ அ. சிவஞானம், தேசிய கல்வி இணைப்பாளர் ஸ்ரீமதி எஸ். சுந்தரலிங்கம், கிழக்குப் பிராந்திய சேவை இணைப்பாளர் டாக்டர் ந. பிறேமதாசன், ஆன்மீக இணைப்பாளர் ஸ்ரீ நா. புவனேந்திரன், வடபிராந்திய உப - தலைவர் ஸ்ரீ சி. முத்துலிங்கம், விரிவுரையாளர் ஸ்ரீமதி சுலோசனா உமாபதிசிவம் ஆகியோர் கலந்துகொண்டனர். டாக்டர் இ. சிவஅன்பு அவர்களின் சங்கீத கதாப்பிரசங்கமும் இடம்பெற்றது.

**அடுத்த இதழ்; "பாலவிகாஷ் சிறப்பிதழாக" வருகிறது**

# தர்சன மகிமை (வெகுமதி)

எனது தர்சனத்திற்குப் பிறகு ஓர் அமைதியான இடத்தில் அமருங்கள். நான் உங்களைக் கடந்து செல்லும் போது எனது ஆற்றல் என்னிடமிருந்து உங்களிடம் வருகிறது. அப்போது நீங்கள் உடனடியாகப் பேச ஆரம்பித்தால் நீங்கள் பெற்ற ஆற்றல் சிதறிப் பயன் படாமல் என்னிடமே திரும்பி விடுகிறது. மற்றப்படி என் கண்படுமிடமெல்லாம் தூய்மையுறும், புத்துணர்ச்சி பெறும் என்பதும் இந்த புத்துணர்ச்சியை நீங்கள் ஒவ்வொரு நாளும் பெற்றுக் கொண்டே இருக்கிறீர்கள் என்பதும் உறுதி.

தர்சனத்தில் கிட்டும் பெறும் பேற்றை ஒரு போதும் குறைத்து எடை போடாதீர்கள். உங்களிடையே நான் நடப்பது கூட ஒரு வெகுமதியே ஆகும். மிக உயர்வான சொர்க்கத்தில் வசிக்கும் கடவுள்கள் அருந்தவமியற்றிப் பெறும் இந்த வெகுமதி உங்களுக்கு தினமும் கிடைத்துக் கொண்டே இருக்கிறது.

இந்த வெகுமதிக்கு நன்றி கூறுங்கள். ஆனால் அதே சமயம் யாருக்கு அதிகமாக அருள்பாலிக்கப் படுகிறதோ அவர்களிடமிருந்து அதிகமாக அன்பும் சேவையும் எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

— பகவான் பாபா


பாபாவின் அருள் உரை அன்பளிப்பு
வியாபாரிமூலை
**அமரர் ஆ. ந. தணிகாசலம்**
நினைவாக
இனத்தவர்கள்

அன்பளிப்பு
**கிளீன்கட்**
பஸ் நிலையம் முன்பாக, யாழ்ப்பாணம்.

# வெற்றி கொள்க!

கோபத்தை அன்பால் வெற்றிகொள்க
வெறுப்பை நட்பால் வெற்றிகொள்க
பொய்யை மெய்யால் வெற்றிகொள்க
கெட்டதை நல்லதால் வெற்றிகொள்க
பேராசையை தர்மத்தால் வெற்றிகொள்க.

—பாபா


பாபாவின் அருள்மொழி அன்பளிப்பு

கனன் போட்டோ கொப்பியிங் சேவை
வங்கிச்சதுக்கம், பருத்தித்துறை.

உதயன் - சஞ்சீவி நிறுவனம்
யாழ்ப்பாணம்.



ஸ்ரீ சாயி அச்சகம், இணுவில்.